பட்டம், பதவிகளை எட்டியும் பாரோம்!

திராவிடநாடு

மலர் 9 | 8-10-50 | இதழ் 16

இலங்கை 25 சதம்] [விலை அணா மூன்று

நாட்டுக்கொரு நல்லாட்சி தேவை

அடக்க நினையாதே அழிந்து போவாய்

சுழன்றடிக்கும் சூறாவளி நாங்கள்— சுருண்டுவிழும் காற்றாடி நீ!

சிவகெங்கையில் என். வி. நடராசன்

"வகுப்புகள், சாதி மத பேதங்கள், நாட்டில் தலைவிரிகோலமாகத் தாண்டவமாடக்கூடாது என்பதே எமது கொள்கையாகும். இதற்குப் பெயர் வகுப்புத் துவேஷமாம்! வகுப்புத் துவேஷக் குற்றம் சாட்டும் இந்த ஆட்சியாளருக்கு, உண்மையில் வகுப்புகள் ஒழியவேண்டுமென்ற ஆசையிருந்தால், போடட்டும் உத்தரவு—அய்யர், அய்யங்கார் என வால் போட்டால் 6 மாதம்! பெயருக்குப் பின்னால், பிள்ளை, நாயுடு வந்தால் 6 மாதம்! 'பிராமணாள்' காபி கிளப் என்று பிரித்துப் போட்டால் ஒரு வருடம்! என்று. போடுமா? தைரியம் உண்டா?" என்று சிவகெங்கை மாநாட்டில் தலைமை தாங்கிய சென்னை "திராவிடன்" ஆசிரியர் தோழர் என். வி. நடராசன், தனது தலைமைச் சொற்பொழிவில் வீராவேசத்தோடு குறிப்பிட்டார். மேலும் அவர் கூறியதாவது:—

அலங்காரம் நிரம்பிய பந்தலின் அழகான வாயில்

"நமது பொதுச் செயலாளர் சிறைக்குள் அடைக்கப்பட்டார் என்று கேட்டதும் சிந்தை கலங்கினோம்! இந்த வழிமுறை கெட்ட அரசாங்கம் 'என்ன செய்யுமோ' என்றே, கலங்கினோம்! ஏனெனில் இது அவ்வளவு விசித்திரமான சர்க்கார். சேலத்துச் சிறையிலே 20 பேர், வேலூரிலே கடலூரிலே பலர் துப்பாக்கிக்கு இரையானினர். 1938ல் தாளமுத்து நடராசனை அனுப்பினோம். பிணமாகத்தான் தந்தார்கள்! இந்த அலங்கோலமெல்லாம் நம் இதயத்தை ஆட்டியது."

ஏனெனில், இது, ஒழுங்கு நீதியை மதியாத சர்க்கார். எதிர்க் கட்சிக்காரர்களை எப்படி நடத்துவது என்று அறியாத சர்க்கார்.

நமது பொதுச் செயலாளர் யார்? இந்நாட்டின் ஏகுரல். எதிர்காலத்தை உருவாக்கும் வீரர்களின் அண்ணா. அவரின் சுட்டுவிரல் அசைந்தால் போதும், மக்கள் எது வேண்டுமானாலும் செய்யத் துடித்துக் கிடக்கிறார்கள். இதை, புரியுமளவுக்கு நல்லபுத்தி வர வேண்டும் இந்த சர்க்காருக்கு!

சர்க்காரின் பஞ்சபுத்தி 700 ரூபாயிலிருக்கிறது! அபராதத்தை வசூல் செய்வார்களாம் நமது பொதுச் செயலாளரிடமிருந்து! 'ஆரியமாயை' 700 ரூபாயில் எடை போடப்படுகிறது!!

ஆரியமாயை, நாட்டிலே, விளைவித்த மாற்றங்களை, உலகும் உணரும். மேற்படி தலைப்பில் அண்ணா, கட்டுரைகள் எழுதினர். ஆரிய மாயையை எதிர்த்த டாக்டர் நாயர், தியாகராயர் கால முதற் கொண்டு திராவிட முன்னேற்றக் கழகம் நடமாடும் இன்றுவரை, என்ன ஏற்பட்டிருக்கிறது. கேட்கிறோம் சர்க்காரை!

எங்கேயாவது கலகம் நடந்ததுண்டா? 'ஆரிய மாயை' பல்லாயிரக் கணக்கில் நாட்டில் பரவிவிட்டது. அதனால் என்ன, குழப்பம் ஏற்பட்டது. எந்த அக்கிரகாரம், அக்கினியால் சூழப்பட்டது. எத்தனை பேர் அவர்கள் வேதனைக்குள்ளாகினர். கூறுமா இந்த சர்க்கார்?

தந்திக்கம்பியை அறுத்து ரயிலைக் கவிழ்த்த உனக்கு யாரைப் பார்த்தாலும் உன்னைப் போலவே தோன்றுகிறது போலும்! காந்தியாரைக் கொல்லுமளவுக்கு வெறி கொண்டவர்கள் நாட்டிலே உலவுகிறார்கள். ஆர். எஸ் எஸ். களில் முக்கியஸ்தரான பராச்சுரேயை விடுதலை செய்தாயே!

யார் வகுப்புத் துவேஷி! உனக்கு வேண்டியவர்களானால் சட்டத்தை வளைத்துக்கொள்வது—எங்கள் மீது அடக்குமுறையை வீசுவதா?

நாங்கள் என்ன பஞ்சு மெத்தையா கேட்கிறோம்? பட்டம் பதவி—எமக்கு எட்டிக்காயாயிற்றே! இருந்தும் எங்களைக் கண்டு ஏன் கடுங்க வேண்டும்? கட்டை விரலை வெட்டி விடுவோம் என்று காமராஜர் மிரட்டுகிறார்! கட்டை விரலை மட்டுமல்ல அந்தமானுக்கே அனுப்பி விடுவோம் என்று கூட நீ எண்ணலாம்—முடியுமா? அதனால், எங்களது இன்பக் கனவுகளை ஒழித்துவிட உன்னால்தான் ஆகுமா? இந்த சர்க்கார் முதுகெலும்பு அற்ற சர்க்கார்! புத்தியை மறந்துவிட்ட சர்க்கார்! சூடு தந்தால் தான் சொரணை வருகிறது! குட்டிய பின்தான் குனிந்து கொடுக்கிறது!

நாட்டின் பல இடங்களில், எங்கள் தலைவர் சிறைக்குள்ளே வெம்பிக் கிடக்கும்போது, நடைபெற்ற கிளர்ச்சிகளை அறிந்தும்—144 தடை விதிகளை வீசியிருக்கிறது! எம். எல். ஏக்கள் சொன்னால், அது தேவ வாக்கா? அதற்குப் பணிந்து விடுதலைத் தூதுவர்களான எங்களை நோக்கியா ஈட்டிகளை வீசுவது?

144!—பிரிட்டிஷ்காரன், தனது எதேச்சாதிகாரத் திமிரால் தள்ளிக் குதித்தபோது உருவானது. அதே திமிரையா, 'சுயராஜ்ய' வீரர்கள் தங்கள் சொந்த சொத்தாக்கிக் கொள்வது? வெட்கம், மானம், ரோஷம் எதுவுமே, இல்லையே!

திருவாரூரில் இயக்கத் தோழர்கள் கருணாநிதி, கண்ணதாசன், அரங்கண்ணல் ஆகியோருக்கு 144, அதிராம்பட்டினத்தில் என். எஸ் இளங்கோவுக்கு 144! குன்னத்தூரில் மணிமொழியாருக்கு 144! தஞ்சை நண்பர்களுக்கு 144! 144 ஆல், இந்த சர்க்கார், தன்னைக் காப்பாற்றிக்கொள்ள எண்ணுகிறது. பாவம்! சூறாவளியைச் சிறு துரும்பு தடுத்து விடவா முடியும்? பொதுச் செயலாளர் அனுமதி பெறாமல், கட்டுப்பாட்டுக்கு இழுக்கு வராமல், நடந்துகொள்ளவேண்டும் என்ற கண்ணியத்தோடு எமது நண்பர்கள் ஆங்காங்கு நடந்துகொண்டிருந்திருக்கின்றனர் இல்லையென்றால் உன்

(9-ம் பக்கம் பார்க்க)

சிவகெங்கை மாநாடு—மக்கள் வெள்ளத்தில் ஒரு பகுதி

உயிர் துடிக்கையில் உபந்யாசம்!

'சுயதேவை' திட்டம்-பசிபோக்காது!

திராவிடம் 'வங்காளம்' ஆவதா?

'இனும் ஒழிப்பு' சட்டம் எங்கே?

ஊழல்களை வளர விடோம்!

உரைநடும் ஆளவந்தார்

வழக்கறிஞர் ராஜசேகரன் முழக்கம்

இராமநாதபுர மாவட்ட தி. மு. க. முதல் மாநாட்டின் வரவேற்புக் கழகத் தலைவர் தோழர் இராஜசேகரன் B. A., B., L. ஆற்றிய வரவேற்புரை:—

செல்வமும், செழுமையும், பெற்றிருந்த சமூகம், வரலாற்றின் அடிநாள் தொட்டு வையத்திற்கு நாகரிகத்தை, நற்பண்பைப் போதித்த இனம், சீர்மையின் சிகரத்திலே வீற்று, பார்முழுதும்—அறிவாட்சி செலுத்திய ஆசான், ஆயிரமாண்டுகளாக அடிமைப்பட்டு—அழிக்கப்பட்டு—அல்லலுற்றுக் கிடப்பதைக் கண்டு — அதைத் தட்டி எழுப்பி, அறிவூட்டி, வாழவழி காட்டிய குற்றத்திற்காக, சிறையிலே தள்ளப்பட்டு,—நாட்டின் சூழ் நிலையிலே பெரிய மாற்ற மேற்பட்டிருப்பதைக் கண்டு அஞ்சிய சர்க்கார், தண்டனையை ரத்து செய்ய—விடுதலை பெற்று, எம்மிடை வீற்றிருக்கும் அறிஞர் அண்ணா அவர்களே!

எம் அழைப்பினை ஏற்று எம்மைச் சிறப்புவிக்க—மாநாட்டிலே தெளிவுபெற — திட்டங்கள் காண — கடமையாற்ற வந்திருக்கும் தாய்மார்களே! தோழர்களே!

உங்களனைவரையும், நாட்டின் எதிர்காலத்தின் சார்பாக, மாநாட்டின் வரவேற்புக் குழுவின் வாயிலாக, ஆசையோடு வரவேற்கிறேன்.

இந்த மாநாட்டை, இருண்ட இந்த மாவட்டத்திலே, இவ்வளவு வெற்றியோடு நடத்திவிட முடியுமா என்ற கேள்வியை, நாங்கள் ஒரு போதும் சனவிடம் போய்க் கேட்டதில்லை.—சுதந்திர திராவிடம் பெறுவது எவ்வளவு உறுதியோ, அவ்வளவு உறுதியாகத் தானிருந்தோம். அதைப் பெறுவதற்கு எவ்வளவு பாடோ, அவ்வளவு பாடும் படவேண்டியதாயிருந்தது. தெளிவோ, திர்க்கமோ இல்லாத சர்க்காரின் விசித்திர ஊழிப்புகளின் நித்திய விளைவாக, நம் இலட்சியத்திற்கு எப்படிப் பிரிதொரு வழியிலே, உரம் சேர்ந்து கொண்டு இருக்கிறதோ, அதைப்போல, நம் அண்ணாவின் மீது வழக்குத் தொடுத்ததன் மூலமாக, இம்மாநாட்டிற்கு நல்ல ஒரு விளம்பரம் கிடைத்திருக்கிறது. அதற்காக நன்றி.

உணவுப் பொருள்களின் விலைகள் எட்ட முடியாதபடி உயர்ந்துகொண்டே இருப்பதும், பட்டினிச் சாவுகள் மலிந்துகொண்டே போவதுமான, இந்த பயங்கரநாட்களிலே, நாம் கூடுகிறோம்.—நாம் கூட வேண்டியவர்களாய் இருக்கிறோம். 'கம்மசர்க்கார் இருக்கிறது, கட்டுப்பாடு (Controls) இருக்கிறது, பங்கீட்டுமுறை (Rationing) இருக்கிறது, வீடு வீடாக நுழைந்து விவசாயிகளின் வயிற்றிலிருக்கும் உணவைக் கூட கோள்முதல் செய்துவர அதிகாரிகள் இருக்கிறார்கள் (Procurement Scheme), பயமேன்? என்று ஒவ்வொரு விருந்திலும், பேச மறந்து விடுவதில்லை இந்த மந்திரிகள். எல்லாம் இருக்கின்றன. யாரும் இல்லை என்று சொன்னதில்லை. இவைகளால் தான் இவ்வளவுதொல்லை என்று சொல்லுகிறோம்.

சர்க்காரின் சுய தேவைப் பூர்த்தித் திட்டம் (Self Sufficienccy Scheme) நாட்டிலே பஞ்சம் தலைவிரித்தாடுவதற்கு — மக்கள் சாவோடு கொஞ்சுவதற்கு, மஞ்சம் அமைத்துக் கொடுத்தது. நாட்டிலே நல்ல விளைவு இருந்தாலும், பரிபூரணமான பலன் இருந்தாலும், மக்களின் தேவையைப் பூர்த்தி செய்யக் கூடிய அளவிற்கு, உணவு எப்போதும் கிடைத்ததே இல்லை, நம் மாகாணத்தில். வெளிநாடுகளிலிருந்து, சிறப்பாக பர்மாவிலிருந்து அரிசி வந்துதான், நம் உலை பொங்கி இருக்கிறது. நாட்டு மக்களுக்கு இந்த உண்மை தெரியாதிருக்கலாம். ஆனால் சர்க்காருக்கு-புள்ளி விவரங்களிலே புரண்டுகொண்டேயிருக்கும் மேதைகளுக்குத் தெரியாமலிருந்திருக்க முடியாது. இந்த உண்மையைத் தெரிந்திருந்தும் நாட்டில் ஏற்பட்டிருக்கும் பஞ்ச நிலையை அறிந்திருந்தும், கருவிலே அழிய வேண்டிய இந்த சுய தேவைப் பூர்த்தித் திட்டத்தைக் கொண்டு வருவது போன்ற கொடுமை, எந்த நாட்டின் வரலாறும் கண்டறியாதது. நம் நாட்டு நீரோ, ரோமாபுரி எரியும்போது வீணை வாசிக்கவில்லை, பெட்ரோலைக் கொட்டுகிறான்!

சுய தேவையைப் பூர்த்தி செய்துகொள்ள வேண்டியதுதான். மறுப்பில்லை ஆனால் எப்போது, எந்த உருவிலே, அத்திட்டத்தைக் கொண்டு வருவதென்பதைக் சிந்தித்திருக்க வேண்டாமா? நல்ல விளைவிற்கான ஏற்பாடுகள் செய்தாகவில்லை! நிலத்தைப் பெருக்குவதில், நீரைக்கொணருவதில், பதவியைப் பேணுகிற அளவிற்குப் பரிவுகாட்டவில்லை! நல்லுழைப்பை நல்க, உழவனுக்குக் காப்பளித்து ஊக்கவில்லை! இந்த நிலையிலா சுயதேவைப் பூர்த்தி உபந்யாசம்? உயிர் ஊசலாடும் நிலையிலுள்ளவனுக்குச் சொல்லும் நீதியா இது? எத்தனை எத்தனை துறைகள், வெளிநாட்டான் நம்மைச் சுரண்டிப் போவதற்கு அமைந்து இருக்கின்றன—அமைத்துக் கொடுத்திருக்கிறோம். மற்றபடி எல்லாம் நாட்டையே கொள்ளைபோக விட்டுவிட்டு, உயிர் பிரச்னையிலா இந்தத் திட்டம்? பிரச்னையைத் தீர்க்கவா—உயிரைப் போக்கவா?

இந்த சுயதேவைப் பூர்த்தித் திட்டத்தால் வெளி அரிசி வராமல் தடைப்பட்டது. உள்நாட்டு அரிசிக்குக் கிராக்கி ஏற்பட்டது. உணவு கோள் முதல் திட்டத்தால் உற்பத்தி பாதிக்கப்பட்டது. உணவுப் பொருள்கள் பதுக்கப்பட்டன. கண்ட்ரோல்கள், கள்ளமார்கட்டுகளுக்கு இடம் தந்தன. போதாத, புரியாத ரேஷன் திட்டம் பொய்க் கூப்பன்கள் பிறக்கவேண்டிய நிர்பந்த நிலையை உண்டாக்கிற்று. இந்த உண்மைகளை சர்க்காரால் மறுக்க முடியுமா? நாட்டு மக்களைப்பற்றி, அவர்கள் வாழவேண்டும் என்பதைப் பற்றி, இந்த ஆள்வாருக்கு சிறிதாவது அக்கரை இருந்தால், இந்த சுய தேவைப்பூர்த்திதிட்டத்தை, முதலில் புதைத்து விட்டு, வெளிநாடுகளுக்கு விரையவேண்டும். வெட்டிப் பேச்சுக்கும், விரயத் திட்டத்திற்கும் செலவிடும் காலத்தைக் காசை, பிச்சைப் பாத்திரமாக்கி, மக்களுக்காக உணவு தேடி வரவேண்டும். கஞ்சி குடிக்கக்கூட, மத்திய சர்க்காரை கெஞ்சியாக வேண்டிய நிலை, ஒழிக்கப்பட வேண்டும். சொல்ல வேண்டும் அவர்களுக்கு, 'உங்கள் நாட்டுக்கோதுமைக்கு, வேறு வெளி நாட்டிலே மார்க்கெட் கிடைக்க முடியாது என்பதற்காக, எங்கள் நாட்டிற்கு வெளியிலிருந்து வந்து கொண்டிருந்த அரிசியை நிறுத்திவிட்டு, பஞ்சநிலையை உற்பத்தி செய்து, உங்கள் கோதுமைக்கு நல்ல மார்க்கெட் தேடிக்கொடுத்த சூட்சமத்தை, மக்கள் புரிந்து கொண்டுவிட்டார்கள். பம்பாயிலும், மத்திய மாகாணத்திலும், 16 அவுன்ஸ்—பூராவும பழக்கப்பட்ட உணவையே கொடுத்து வருவதும், இந்த நாட்டில் 6 அவுன்ஸ்—சாபபிட்டறியாத, சாப்பிட முடியாத உணவுப் பொருளை, வாரத்திலே ஏழு நாட்கள் போக மீதி நாட்களில் வழங்குவதும், அவர்களுக்குத் தெரிந்துவிட்டது. இந்த நிலை வளர்ந்தால 'வங்காள'மாகிக் கொண்டிருக்கும் திராவிடம் அரசியல் 'அஸ்ஸாம'ாக மாறி விடும்" என்று எச்சரிக்க வேண்டும். உள்நாட்டிலே கிராமியப் போலீ ரேஷன் முறையை இன்றே நிறுத்திவிட்டு, கண்ட்ரோல்களின் ஊழல்களை அடியோடு ஒழிக்கவேண்டும்.

உழைப்பை நல்கி, கேட்ட கேட்ட வரியை எல்லாம் குவித்து, வாழ்விழந்து கிடக்கும் நாட்டின் பாட்டாளி வர்க்கத்திற்குப் படிக்க வசதி இல்லை. தகுதி, திறமை என்று கூறி, விரட்டப் படுகின்றது. உழைத்துப் போட மட்டும்தான், தகுதியாம்! திறமையாம்! இதை நம்பிக் கொண்டிருக்க, காங்கிரஸில்கூட, இப்போது ஆளில்லை என்பதை, மத்திய சர்க்கார் உணர்ந்தாக வேண்டும். மக்களுக்கு வகுப்புரிமை வழங்கும் முறையிலே, அரசியல அமைப்புத் திட்டம, திருத்தி அமைக்கப்பட வேண்டுமென்று எச்சரிக்க விரும்புகிறோம். கல்வித் துறையிலும், மத்திய மாகாண அரசாங்க அலுவல்களிலும், சர்க்காரின் உதவி பெறும் ஒவ்வொரு ஸ்தாபனத்திலும், அந்தந்த வகுப்பாரின் எண்ணிக்கை விகிதப்படி தான், ஆள் அனுமதிக்கப்பட வேண்டும் தற்காலிக நியமனங்களில்கூட, இந்த நீதி, மிகவும் கண்டிப்பான முறையிலே, கொண்டு செலுத்தப்பட வேண்டும். தவறினால், ஆளவந்தாரும் தவறி விழ ஏதுவாகுமென்று அறிவிக்க விரும்புகிறேன்.

ஜமீன்களை, இனாம்களை ஒழிக்கிறோம் என்று சண்டப் பிரசண்டம் செய்த வீரர்கள், பாதிக் கிணறு தாண்டியதோடு, மறந்துவிட்டார்கள்—மிகவும் ஆபத்தான சங்கதி! இனாம் ஒழிப்புச் சட்டம், வரும், வரும் என்று சொல்லிக் கொண்டிருந்ததும், அடங்கிவிட்டது.

தலைமுறை தலைமுறையாக, வியர்வையை—கண்ணீரைப் பாய்ச்சி, கால் வயிற்றை நிரப்பிக் கொண்டிருந்த இனாம் கிராமக் குடிகள், இனாம்தாரர்களின் கொடுமை தாளாது துடிக்கின்றனர். பிரசங்கிகள் விருந்துக்குப் போய்விட்டார்கள்!

இனாம்தாரர்களில் பெரும்பாலோர் பார்ப்பனர்கள். வடக்கிருந்து வந்தவர்களுக்கு, வடக்கே நல்ல செல்வாக்கு இருக்கத்தானே செய்யும்! மத்திய சர்க்காரும் மனம் வைத்தது. இனாம் சட்டம் பிணமாயிற்று—நாற்றமெடுத்து விட்டது. எங்கே இனாம் சட்டம்? கேட்கின்றனர் மக்கள்! அவர்கள் தப்பமுடியாது. அச்சட்டத்தை உயிர்ப்பித்துத் தான் தீரவேண்டும். அவர்களுக்கென்ன..., அரசியல் பதிவிரதைகள் அல்லவா! முடியாத தொன்றுண்டா!

இனாம் **தேவஸ்தானம்** இவைகளை இன்னும் ஒழிக்காது வைத்திருப்பது—ஜமீன் ஒழிப்பிற்குப் பின்னும் இருக்க விடுவது, பெருந்தவறு என்பதை உணரவேண்டும் இந்த சர்க்கார். இந்து அற நிலையப் பாதுகாப்பு மசோதாவைக் கொண்டு

(11-ம் பக்கம் பார்க்க)

சாதிபேதம் சாகும்வரை இருப்போம்!

அடக்குமுறைகாண அஞ்சோம்

துவேஷம்கொண்டு துள்ளாதே!

சி. என். ஏ. விடுதலை முரசு

திருச்சியின் குதூகலம்

28—9—50 காலை, பொதுச் செயலாளர் சி. என். ஏ, சிறையிலிருந்து விடுதலையானார் என்ற செய்தி கேட்டு திருச்சி நகரம் மகிழ்ந்தது. மாணவரும், தொழிலாளரும், இயக்கத்தோழர்களும் இழந்த மதியைத் திரும்பப் பெற்றுவிட்டோம் என்பதுபோல குதூகலம் அடைந்தனர்! பொதுச் செயலாளர் தங்கியிருந்த என். எஸ். பங்களா நோக்கி, நகரின் பல பாகங்களிலிருந்தும்பலர்வந்த வண்ணமேயிருந்தனர். நடிகமணி தோழர் எம். ஆர். ராதா உள்பட பலர், சி. என். ஏவுக்கு மலர்மாலைகள் அணிவித்து, தங்கள் மகிழ்ச்சியைக் காட்டிக் கொண்டனர்.

அன்று மாலை, திருச்சி டவுன் ஹால் முன் நகராண்மைக் கழக உறுப்பினர் தோழர் என். சங்கரன் தலைமையில் நடைபெற்ற பாராட்டுக் கூட்டத்தில், பல கிளைக் கழகங்கள் வாயிலாகவும், 'திராவிடப் பண்ணை' போன்ற தனிப்பட்ட இயக்கப் பிரமுகர்களாலும் ஏராளமான மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன. பிறகு திருச்சி தோழர் டி. கே. சீனிவாசனும், தோழர் ஈ. வே. கி. சம்பத்தும், ஆளவந்தாரின் போக்கு குறித்து, வீரமுழக்கம் செய்தனர். கடைசியில் தன்மீது மக்கள் காட்டும் அன்புக்கு நன்றி செலுத்திவிட்டு பொதுச் செயலாளர் பேசினார். அதன் சுருக்கம் கீழே:-

தோழர் சம்பத் என்னை விடுதலை செய்தது சர்க்காருடைய புத்திசாலித்தனம் என்றார். அது ஓரளவு உண்மைதான். 'ஏன் எனக்கு ஆறு மாதம் காவல் தண்டனை கிடைக்கச் செய்த இச் சர்க்கார் பத்து நாட்களுக்குள் தாங்களாகவே விடுதலை செய்தனர்' என்று யோசித்தேன். எனக்கே புரியவில்லை—எந்த சூழ்நிலை இந்த ஆளவந்தாரை இம்முடிவுக்கு வரச் செய்தது என்பது பற்றி. இன்று காலையில் இதைப்பற்றி எண்ணிக்கொண்டே ஒரு பத்திரிகையைப் பார்த்துக்கொண்டிருந்தேன். அதில் என்னை விடுதலை செய்தது குறித்து சர்க்கார் சார்பில் வெளியிட்டிருந்த செய்தி, ஒன்று, இருந்தது.

"தஸ்தாவேஜூகளைப் படித்துப் பார்த்தோம் இதுவரையில், அவர்கள் அனுபவித்த தண்டனை போதுமெனக் கருதுகிறோம். எனவே விடுதலை செய்துள்ளோம்" என்று விளக்கம் தரப்பட்டிருக்கிறது.

படித்துப் பார்த்தார்களாம்! நாங்கள் சிறையில் கிடக்கும் நேரத்தில் தஸ்தாவேஜூகள் மீது கவனம் வைத்து படித்துப் பார்த்தார்களாம்!!

மகிழ்ச்சியடையக் கூடிய செய்திதான், இந்த சர்க்கார், இவ்வளவு பொறுப்போடு, தஸ்தாவேஜூகளைப் படிக்கிறது என்பது! நான் சிறைக்குள் கிடக்க, எனது தம்பிமார்கள் கொதித்துத் துடிக்க, அது கண்டு தஸ்தாவேஜூக்களைத் தேடிச் சென்ற சர்க்கார், ஆரம்பத்திலேயே எங்களது புத்தகங்களைப் படித்திருந்தால், இவ்வளவு தூரம் எங்களை கஷ்டத்திற்குள்ளாக்க வேண்டியிராது — அவர்களும் தஸ்தாவேஜூக்களை நோக்கிச் சென்றிருக்க வேண்டியிராது!

நான், எழுதினேன் பல புத்தகங்கள். பெரியாருடைய மொழிகளும், நூல் வடிவில், வெளிவந்தது. அவைகளை நாடு, பூரிப்போடு ஏற்றுக்கொண்டது. இதைப் பார்த்து பொறுமையா, படுவது சர்க்கார்? சிரிக்கிறீர்கள், நீங்கள்! இந்தச் சர்க்காரின் போக்கோ சிரிப்பாய்ச் சிரிக்கிறது!!

இந்த நாட்டில் நானும், பெரியாருந்தான் கடைசி 'மிதவாதிகள்' (Moderates) எங்கள் கட்சியிலிருக்கும், ஏனையோரெல்லாம், தீவிரவாதிகள்—சிறுமையைக் கண்டால் கொதித்தெழும் சிங்கங்கள்!

இதைப் புரிந்து கொள்ளாத இந்த சர்க்காரின் அறிவு சூன்யத்தைக் காண, அனுதாபப் படுகிறேன். எங்களைச் சிறையில் போட்டதன் பலன் என்ன ஆயிற்று? மிதவாதிகளைப் பிடித்தடைத்தால் என்ன ஆகும்? தீவிரவாதிகளின், கட்டு அவிழ்க்கப்பட்டால் என்ன நேரும்?

வெளியில் இருக்கும் போது, எங்கள் கட்சித் தோழர்கள், "ரயிலைக் கவிழ்ப்போம்—காங்கிரஸ்காரர்கள் சுயராஜ்யத்தைப் பெற செய்ததைப் போல நாமும் செய்வோம்" என்று கேட்கும் போது "அது கூடாது—நாட்டுக்கு நஷ்டம்" என்று நாங்கள் தடுப்போம். தபாலாபீசைக் கொளுத்துகிறோம் அது சுலபமான வேலை" என்று அனுமதி கேட்டால், "பாதைத் தவறுகிறீர்கள். என்ன அவசரம்? இதிலெல்லாம் ஈடுபடக் கூடாது!" என்று, கண்டித்து, கட்டுப் படுத்துவோம். வெள்ளத்தைத் தடுக்கும் கரைகளை இடித்துவிட்டால், என்ன ஏற்படும்? விளைவு, அசாமைவிட பெரிய பூகம்பத்தையல்லவா, நாடு காணச் செய்யும்!

"ஆரிய மாயை' நான் 1944-45-46 ஆண்டுகளில் 'திராவிட நாடு' இதழில் எழுதிய கட்டுரைகளைத் தொகுத்து வெளியிடப்பட்ட நூல். அந்த நூல் மீது, அவசரத்தோடு, இந்த 1950ல், நடவடிக்கை யெடுத்த சர்க்காருக்கு இப்போது ஒரு சட்டப் பிரச்னையை எடுத்துக் காட்டுகிறேன்! "வீராப்போடு என்மீது வழக்குத் தொடர்ந்த, ஏ, அரசாங்கமே! உனக்கு என்மீது நடவடிக்கை எடுக்க அதிகாரமில்லை!" என்று தெரிவிக்கிறேன். ஆமாம்! என் மீது, இச்சர்க்கார், சட்டப்படி பார்த்தால் நடவடிக்கை எடுக்க முடியாது. காரணம், "ஆரிய மாயை" நூல் அச்சடிக்கப்பட்டது இங்கல்ல—சுதந்திர இந்தியாவில் அல்ல—பிரெஞ்சுப் புதுச்சேரியில்!!

பிரெஞ்சுப் பிரதேசத்திலிருந்து வெளியான நூல் மேல் இங்கிலீஷ் சட்டமோ, அலைகத் தழுவிய எந்தச் சட்டமோ நடவடிக்கை எடுக்க முடியாது.

அதேபோல, "பொன் மொழிகள்" நூலும், பெரியார், எங்கெங்கோ, எவ்வெப்பொழுதோ, பேசி, எழுதியவைகளிலிருந்து பொறுக்கி எடுத்து தொகுக்கப் பெற்றது. அவர், புத்தகமாக, எழுதித் தந்தது அல்ல.

இந்தக் காரணங்களை விளக்கி எங்களால் தப்பித்துக்கொண்டிருக்க முடியும். ஆனால் எங்கள் பரம்பரை, கருத்துக்களை அனாதைகளாக விடக் கூடிய பரம்பரை அல்ல' ஆரியர்களின் வேதசாஸ்திரங்களைப்போல அசரீரியாகச் சொல்லப்பட்டவை அல்ல! ஆகையால்தான், தண்டனையை ஏற்றுக் கொண்டோம்.

1946-ம் ஆண்டில் எழுதப்பட்ட கட்டுரை மேல், பல்லாயிரக்கணக்கான மக்கள் படித்து அவர்கள் மனதில் பதித்த பின்னர், 1950ல் வழக்குத் தொடர்கிறது சர்க்கார். 1946' 1950'! இந்த நான்கு ஆண்டுகளில், சர்க்கார் கூறும் "வகுப்புத் துவேஷம்" பரவாமலா, இருந்தது? 'ஆரியமாயை' ஐந்து பதிப்புகள்வரை வெளிவந்து விட்டது. "பொன்மொழிகள்" முதல் பதிப்பு, முடிந்து, இரண்டாம் பதிப்பு வெளிவரும் தருவாயிலிருக்கிறது. இவைகளிலிருந்த கருத்துகள் மக்களால் படிக்கப்பட்டு, அவர்கள் மனதிலெல்லாம் நிறைந்த பிறகு சர்க்கார் நடவடிக்கை எடுக்கிறது! 1946-ல் அல்லவா, எடுத்திருக்கவேண்டும் சட்டபுத்தகத்தை — தொடுத்திருக்கவேண்டும் வழக்கு? பாம்பு என்று சொல்லி, அதற்குப்பால் வார்த்து, பழம் வைத்துகாப்பாற்றி அது சாப்பிட்டுவிட்டுப் போன பிறகு, அது இருந்த இடத்தை அடிப்பதைப்போலல்லவா இருக்கிறது சர்க்காரின் செயல்! நான்கு ஆண்டுகளுக்குப் பின்னர் 'நாட்டில் வகுப்புத்துவேஷம்பரவாமல் தடுக்க வழக்குத்தொடர்ந்தோம்' என்றால் என்ன அர்த்தம்? தங்களால் மறுப்பு எழுத முடியவில்லையே என்ற பொறுமை, நம்கட்சி வளர்வதுகண்டு துவேஷம் — இதைத்தவிர வேறென்ன இருக்க முடியும்?

ஒன்பது நாட்கள் சிறையில் வைத்திருந்து பத்தாவது நாள் வெளியே விட்டிருக்கிறது—சர்க்கார்—நடமாத்திரி கொலுவைப்பதுபோல! நாங்கள் உள்ளே போனதும், வெளியே வந்ததும் நாடகத்தில் நடந்த ஒரு 'சீனப்'போலத்தான் இருந்தது.

நாங்கள் இரண்டுபேர்-செய்து முடிக்கவேண்டிய வேலையோ, ஏராளம்! எங்களுக்காகக்கண்ணீர் வடித்துக்கிடக்கும் காளைகள், ஏராளம்!! இந்நிலையில், வகுப்புத்துவேஷம் என்று சொல்லி வழக்கு-சிறைத்தண்டனை—பத்து நாட்கள் கழித்து விடுதலை! மந்தபுத்தியே, மந்தபுத்தியே! நீதானா சர்க்கார்!!

அனுவசியமாக உள்ளே வைத்தாய் — வெளியே விட்டாய்—புத்தகம் எழுதியதற்காக! நான் வெளியில் வருவதற்கு முன்னால ஒரு புத்தகம் படித்துக்கொண்டிருந்தேன். அதில் வில்லியம் என்பவன் மேல் வேலைக்காக இலண்டனுக்குப் போகிறான். அந்தக் கட்டத்தைப்படித்துக்கொண்டிருந்தபோது ஜெயில் சூப்ரண்ட் உங்களை விடுதலை செய்திருக்கிறது என்றார். என்ன காரணம் என்றேன். 'கவர்னர் நிர்க்காலோசனைக்குப் பிறகு தஸ்தாவேஜூகளை அலசிப்பார்த்து வெளியில் விடும்படி உத்தரவிட்டிருக்கிறார்' என்றார்.

ஆனால் என்னை வெளியிலேயேவிட்டு வைத்திருப்பார்களா? இன்றிரவு மந்திரிமார்கள் கூடுவார்கள். வெளியே இருந்தாலும் உள்ளே அடைபட்டாலும் ஒரே மாதிரியாகத்தானே இருக்கிறது என்று சிந்திப்பார்கள். சர்க்காருக்கு எங்கள் வளர்ச்சி பொறுமையாக இருந்தால் கேட்பவர்கள் காதுகளை அறுத்து விடட்டும்! பேசுவோர்களுக்கு களைத் துண்டித்து விடட்டும்! அதற்குப்போதுமான கத்திகள் இல்லையானால் பாகயோகாதிகளைச் செய்து நாங்கள் பேசமுடியாமலும் நீங்கள் கேட்க முடியாமலும் தடுத்துவிடட்டும்! அதற்காக நாட்டில் நிலவும் அமைதியைக் கெடுக்கவேண்டாம். நாட்டில் வகுப்பு இருக்கும்வரை, சாதிகள் இருக்கும்வரை, சுரண்டுபவன் சுரண்டப்படுபவன் என்ற வேற்றுமை இருக்கும்வரை, உயர்ந்த சாதிக்காரன் தாழ்ந்த சாதிக்காரன் என்றபேதம் இருக்கும்வரை நாங்கள் இருப்போம். நாங்கள் இல்லாவிட்டாலும் வேறு யாராவது இருக்கத்தான் செய்வார்கள். மலர் விரிந்தால் மணம் வீசத்தான் செய்யும்! மேகங்கள் கூடினால் மயில் ஆடத்தான் செய்யும்! தென்றல் வீசினால் குளிர்ச்சி ஏற்பட்டுத்தான் தீரும்! ஆட்சி சரியில்லை மக்கள் கண்டிக்கத்தான் செய்வர்!

ஜெயிலிலே போட்டாய். என்ன நடந்தது? யார் யாருக்கு என்னென்ன தோன்றியதோ அதையெல்லாம செய்யத் தொடங்கிவிட்டார்கள் எப்படித் தடுக்கமுடியும்? கோவில்பட்டி மாநாட்டில் செய்த தீர்மானத்தின்படி ரயில்வே ஸ்டேஷன் போர்டுகளில் இருந்த இந்திப் பெயர்கள் எத்தனையோ இடங்களில் அழிக்கப்பட்டன, நாங்கள் வெளியே இருந்தபோது மலர்ந்திருந்த கருத்துக்கள் உள்ளே போனதும் செங்காயாகிப் பழுத்து போர்டுகளை அழிக்கச் செய்திருக்கின்றன! கும்பகோணத்தில் "பிராமணாள் காப்பி ஹோட்டல்" என்ற போர்டுகளில் இங்கே காப்பி மட்டுந்தானே விற்கிறார்கள், பிராமணர்களையுமா விற்கிறார்கள்? என்று "பிராமணர்கள்" என்ற சொல்லை அழித்திருக்கிறார்கள். நாங்கள் உள்ளே போனால் என்னென்ன நடக்கும் என்பதற்கு இது ஒரு 'சாம்பிள்!'

நான் உள்ளே போனவுடன், கைதிகள் "நீங்கள் எதற்காக சிறைப்படுத்தப் பட்டீர்கள்?" என்று கேட்டார்கள். என்னால் என்ன பதில் சொல்லமுடியும். கன்னம் வைத்திருந்தால், சவ...

(11-ம் பக்கம் பார்க்க)

திராவிடநாடு

ஞாயிறு] 8—10—50 [காஞ்சி

சென்றேன்! வந்தேன்!!

எதிர்பார்த்தது நடைபெறுகிறது—சென்று வருகிறேன் சிறைக்கு என்று, என் அருமைத் தோழர்களுக்கு, "திராவிடநாடு" மூலம் தெரிவித்த நான், எதிர்பாராத முறையிலே விடுவிக்கப்பட்டு வெளியே வந்திருக்கிறேன் என்ற செய்தியைத் தெரிவிக்கும் நிலை பெற்றுள்ளேன்! விசித்திரமான நிலைமை!! இந்த "விடுதலை"—களிப்பூட்டும் சம்பவமல்ல—இது நிச்சயமாக ஒரு கேள்விக்குறி! ஆமாம், நம்மை நோக்கி வந்துள்ள ஒரு கேள்விக்குறி!

சில திங்கள் சிறையிலே இருக்கவேண்டி நேரிடும் என்ற நினைப்பிலே, 'திராவிடநாடு' அலுவலகம், கழகக் காரியாலயம் ஆகியவற்றினை நடத்திச் செல்வதற்கான ஏற்பாடுகளைச் செய்துவிட்டு திருச்சி சென்றேன்—சிறைக்குள் தள்ளப்பட்டேன். பத்தாம் நாள், சிறைக்கதவு திறக்கப்பட்டுவிட்டது! ஏன்? நான் அறியேன் பராபரமே! நாடாள்வோரின் நெஞ்சிலே எப்படி, எப்போது, எதன் மூலம், இந்த எண்ணம் ஏற்பட்டது என்பது, ஒரு கேள்விக்குறியாகவே இருக்கிறது.

வழக்குத்தொடுத்தார்கள்—ஏன்?—விளங்கவில்லை. ஏடு தீட்டி ஆண்டு ஆறு சென்ற பிறகு, பதினைந்தாயிரம் ஏடுகள் நாட்டிலே பரவியான பிறகு, ஏட்டின் துணையாலல்லவே, அதிலே நான் பொறித்திருந்த கருத்துக்களை, விளக்கவுரை, விரிவுரையுடன், மக்கள் மன்றத்திலே, மாற்றாரும் ஏற்றுக்கொண்டு தீரவேண்டிய முறையிலே எடுத்துக் கூறுவதற்கு ஏற்ற சூழ்நிலை ஏற்பட்டான பிறகு, ஏடு தீட்டிய என்மீது வழக்குத் தொடுத்தார்கள்—ஏன்? அதுவும் கேள்விக் குறியாகத்தான் இன்றுவரை இருந்துவருகிறது!

தண்டித்தார்கள்—தண்டனையை அனுபவித்துக்கொண்டிருந்த நேரத்தில், துரைத்தனத்தார் தஸ்தாவேஜுகளைப் பார்த்து, இதுவரை அனுபவித்த தண்டனை போதும் என்று கருதி, விடுதலை செய்தனர்—விடுதலையா? — பொருத்தமான முறையிலே கூறவேண்டுமானால், விடுதலை அல்ல—வெளியே போகச் சொல்லிவிட்டார்கள். தஸ்தாவேஜுகளைத் துரைத்தனத்தார் படித்தார்களாமே!—ஏன்? புரியவில்லை!! படித்த பிறகு, பத்து நாட்கள் இருந்தது போதும் என்ற முடிவுக்கு வந்தார்களாமே, அது ஏன்? புரியவில்லை! எல்லாம் ஒரே கேள்விக்குறி மயம்!! வெளியே போகச் சொல்லியான பிறகு, சர்க்கார் மேற்கொண்டு என்ன செய்வதாக உள்ளனர்? புரியவில்லை! கேள்விக்குறிதான் இருக்கும்!! அபராதம் கட்டித்தான் தீரவேண்டும், வசூலித்தே தீருவோம், என்று சில அமைச்சர்கள் 'அடாணு' பாடும் காரணம் என்ன? புரியவில்லை! இவ்வளவு வீரமாகப் பேசும் இந்த விந்தையான மந்திரிகள், ஏன் 'சிறைக் கதவைத் திறந்துவிட்டோம், சென்றுவிடுங்கள் வெளியே' என்று சிந்துபாடினார்கள்? தெரியவில்லை! கேள்விக்குறி!!

இப்படி, எதற்கும் கேள்விக்குறி மயமாக இருப்பது, முதலிலே பார்க்கும்போது, ஆச்சரியமாகவும், புதிர் போலவுந்தான தோன்றும்—அலசிப் பார்த்தால் விளங்கும். சர்க்காரின் நிலைமை, அப்படியாகிவிட்டது என்பது உண்மை—அவர்களால் எதுவும் செய்யாமலும் இருக்க முடியவில்லை, எதையும் சாதிக்கவும் முடியவில்லை, கோபம் ஒரு கணம், சோகம் மறுகணம், ஆத்திரம் ஒரு விநாடி, அச்சம் மற்றோர் விநாடி, நெறித்த புருவம் ஒரு சமயம், கவிழ்ந்த முகம் மற்றோர் சமயம், பல்லை நற நறவெனக் கடித்திடும் நிலைமையில் உள்ளனர் ஒரு சமயம், பல்லை இளித்திடும் நிலையில் உள்ளனர் மற்றோர் சமயம், உறுமல் ஒரு சமயம், உளறல் மற்றோர் சமயம், ஹிட்லராகிறார்கள் ஒரு சமயம், டோஜோவாகிறார்கள் மறு சமயம், இப்படி, இன்னிறந்தான் இவ்வண்ணந்தான் என்று கண்டுகொள்ள முடியாத "உயர்ந்த நிலையை" அடைந்துவிட்டார்கள், ஊராளும் உத்தமர்கள்—எனவேதான் அவர்களின் போக்கு ஒவ்வொன்றும் ஒரு கேள்விக் குறியாகிறது!! பித்தர்கள் என்று சொல்வதற்குப் பதிலாக, இவ்வளவு சுற்றி வளைத்துத் தீட்டுகிறேன் என்று எண்ணிட வேண்டாம். அமைச்சர்களின் அதியற்புத நடவடிக்கைகளைப் பார்க்கிறபோது, உங்களுக்கு 'பித்தர்' செயல்தான் நினைவுக்கு வரும்—ஆனால் தயவு செய்து வெளிப்படையாகக் கூறிவிடாதீர்கள்—கூறினால், உலகம் நமது மக்களைத்தான் கேலியாகப் பேசும், இப்படிப்பட்டவர்களை நாடாள்வோராக்கினீர்களே, எப்படி ஏற்பட்டது இந்தப் பித்தம், என்று கேலி பேசும்!

கேள்விக்குறி—இவர்களின் ஒவ்வொரு நடவடிக்கையும் என்றேன்! இவர்களின் நடவடிக்கைகள் மட்டுமல்ல, இவர்களே கேள்விக்குறிகள்! ஆம், உண்மையிலேயே கேள்விக் குறிகள்!! இந்த அமைச்சர்கள், நம்மைப் பார்த்து, 'வகுப்புத் துவேஷி'—என்று கூறுகிறார்கள்! ஆனால் இவர்களைப் பார்த்து, நாட்டிலுள்ள வைதீகர்கள், இந்த மந்திரிகள், முகமூடி அணிந்த வகுப்புவாதிகள் என்று பேசுகிறார்கள், எழுதுகிறார்கள்! அமைச்சர்கள் நம்மை நிந்திக்கிறார்கள், வகுப்புவாதிகள் என்று—ஆனால் இதே அமைச்சர்கள், நீதி மன்றத்தின் நெடிய படிகளிலே 'பயபக்தி'யுடன் ஏறிச் செல்கிறார்கள், 'வகுப்பு வாத' ஜஸ்டிஸ் கட்சியின் திட்டமாகிய 'கம்யூனல் ஜி. ஓ.'—வைக் காப்பாற்ற! நான் 'ஆரிய மாயை' எப்படிப்பட்டது என்பதை நாட்டுக்குக் கூறிவிட்டேன் என்று என்னைத் தண்டிக்கிறார்கள்—அதேபோது, அமைச்சர் கோபாலர், வர்ணாஸ்ரமம் அழிந்தாக வேண்டும், என்று அறிவாண்மையுடன் பேசுகிறார்! நம்மை நோக்கும்போது, தேசீயக் கோலம் காட்டி மிரட்டுகிறார்கள், அதேபோது வேறோர் புறமோ, திபாகர், நாயரிடம் பாடம்கேட்டவர்களாகக் காட்சி தருகின்றனர்! விந்தையான மனிதர்கள்! விசித்திர சித்தர்கள்!! மனித உருவிலே உள்ள, கேள்விக் குறிகள்!!

எனவேதான் இவர்களிடம் ஒப்படைக்கப்பட்ட நாட்டிலே, எப்போது எது நடைபெறும், எது எப்படி நடைபெறும், எதற்காக எது நடைபெறும், என்ற நிலை இல்லை—தெளிவு, திட்டம், முறை, நெறி, காணோம். என்மீது வழக்கு தொடுக்கப்பட்டதும், தண்டனை விதிக்கப்பட்டதும், திடீரென விடுவிக்கப் பட்டதுமான, 'சம்பவங்கள்'—கேள்விக் குறிகள் நாடாள்வதால் ஏற்பட்ட விளைவுகள்!!

நமது நிலைமையோ, கேள்விக்குறியில் இல்லை! பாதை, தெளிவாகத் தெரிகிறது! பயணம் துவக்கப்பட்டாகி விட்டது!

திருச்சியிலிருந்து — சிறையிலிருந்து — சிவகெங்கை, மதுரை, காஞ்சீபுரம், சென்னை—இப்படிப் பயணம் தொடர்ந்து இருக்கிறது—பணி நடந்தவண்ணம் இருக்கிறது — நாட்டை ஆரிய மாயையிலிருந்து விடுவிக்கும் நற்பணி தொடர்ந்து நடைபெற்ற வண்ணம் இருக்கிறது. நாட்டு நிலைமையோ, நமது பணி, தக்க பலனை, கோரிய பலனை, இன்பத் திராவிடத்தைப் பெற்றுத் தரும் என்ற நம்பிக்கையைத் தருகிறது! பட்டி தொட்டிகளில் எல்லாம் விழிப்புணர்ச்சி—வீரம்—ஆர்வம்—விடுதலை வேட்கை!! இளைஞர்கள் எஃகுக் கம்பிகளாகி விட்டனர்! பள்ளிகள் பாசறைகளாகிவிட்டன! கலைக் கூடங்கள், பகுத்தறிவுக் கதிர் பரப்பும் விஞ்ஞான நிலையங்களாகி விட்டன! தெளிவும் ஆர்வமும் மட்டுமல்ல, செயல்திறம் மிகமிக அரிய முறையிலேயும் அளவிலேயும் வளர்ந்து விட்டிருக்கிறது. நாடு, தலைநிமிர்ந்து நிற்கிறது—நமது இன உணர்ச்சி எங்கும் காணப்படுகிறது! போரார்வம் மட்டுமல்ல, போரார்வம்—அறப்போரைக் குறிப்பிடுகிறேன் — எங்கும் கொந்தளித்தவண்ணம் இருக்கிறது. திராவிட இயக்கம் இரண்டுபட்டதால் ஆர்வம் இறந்துபடும் என்று எண்ணியவர்கள் ஏமாளிகளாயினர்! விரல்விட்டு எண்ணக் கூடிய சிலர் தவிர, மற்றவர்கள், திராவிடத்தின் பொது நலனைக் கருதி, சில்லறைப் பூசலை வெறுத்து ஒதுக்கி விட்டனர்! சுருங்கக்கூற வேண்டுமானால், ஒரு நாடு விடுதலை பெறுவதற்கான பக்குவம் நிச்சயமாக உருவாகிக் கொண்டு வருகிறது! "நல்ல சமயமடா! இதை நழுவ விடுவாயோ!!"—என்று, நாட்டின் பொது நலத்திலே பற்று கொண்டவர்கள், கேட்கின்றனர். திராவிட முன்னேற்றக் கழகத்தினரே! விடை தாருங்கள்—செயலால்! விடுதலை முரசு கொட்டுங்கள். கேள்விக்குறிகள், கேலிச் சித்திரங்களாகிவிடும்! அச்சமூட்டுவோர், அஞ்சி ஒதுங்கும் நிலை ஏற்பட்டுவிடும். அறப்போர்க்களம், நம்மை அழைக்கிறது, அணிவகுப்பைத் திறனுள்ளதாக்குங்கள்!

புதிய பொறுப்புகள் நம்மை நோக்கிவருகின்றன. பேச்சுரிமையை இனிக் காத்துத்தீருவது, சர்க்கார், திராவிட முன்னேற்றக் கழகத்தினருக்குத் தடை உத்தரவு விதித்தால்—144 போட்டால்—மீறுவது என்று சிவகெங்கையிலே தீர்மானித்தாகி விட்டது. புதியதோர் பொறுப்பு!!—ஆனால் தவிர்க்கமுடியாத கடமை!! திராவிடத்தின் நிலைமையை, திராவிடநாடு திராவிடருக்கே என்ற மூலாதாரப் பிரச்சினையின் தன்மையை, நேரு சர்க்கார் உணரும்படிச் செய்வதற்காக, வடநாட்டு மந்திரிகளுக்குக் கருப்புக்கொடி காட்டுவது என்ற செயல்திட்டம்வேறு இருக்கிறது. பொறுப்புடன் செய்யப்படவேண்டிய காரியம் அது. திராவிடர் திரண்டெழுந்து செய்யவேண்டிய காரியம். வேலை நிரம்ப இருக்கிறது—வீரர்களுக்கு! வேலை நிரம்ப இருப்பதால்தான், வெற்றிப் பாதையிலே ஏறெனச் செல்லவேண்டி இருப்பதால்தான், வீணரின் விஷமத்துக்கு மதிப்பளிக்காதீர், என்று அடிக்கடி நினைவூட்டுகிறேன்! வாருங்கள் திரண்டு, வேலைநிரம்ப இருக்கிறது! இந்தத் திங்கள் 25-ம் தேதி, ஆச்சாரியார் வருகிறார்! வேலையில்லா மந்திரி வருகிறார், நமக்கு வேலை தருகிறார்! ஆயிரத்துக்கு மேற்பட்ட தமிழர்களைச் சிறையிலே தள்ளியவர் வருகிறார்! தாளமுத்துவைம் நடராஜனையும் பிணமாக்கித் தந்த பெருமையைத்தேடிக்கொண்டவர் வருகிறார்! பெல்லாரி ஜெயில், உடம்புக்கு நல்லது என்று கேலிபேசிப் பெரியாரைக் கொடுமைக்காளாக்கியவர் வருகிறார்! நாம் அனைவரும் 'திராவிடகழகமாக' இருந்தபோது கழக நிர்வாகக் குழு முழுதும் சிறைக்குள்ளே தள்ளப்பட்ட பிறகு பவனிவந்தாரே அதே ஆச்சாரியார் வருகிறார்! காட்டுங்கள் கருப்புக்கொடி!!

திட்டப்படி, பலாத்காரமற்ற தன்மையில், தூய உள்ளத்துடன், நாம் நமது கடமைகளை நிறைவேற்றிக் கொண்டிருப்போம் — கேள்விக் குறிகள், சிறைக் கதவை திறப்பதும் மூடுவதும், திகைப்பதும் தடுமாறுவதுமாகக் காலந் தள்ளட்டும்—கவலையில்லை. வந்தேன் வெளியே, வாரீர் தோழர்காள்!—பணியாற்றுவோம், என்று அழைக்கிறேன்.

பத்து நாட்கள் சிறையிலே இருந்தபோது, உங்கள் அன்பையும் ஆதரவையும் அளித்தீர்கள். மகிழ்ச்சி — நன்றி! கட்டுப்பாட்டுடன், கண்ணியத்தை இழக்காமல், நடந்துகொண்டீர்கள் — பெருமைப்படுகிறேன். மக்களின் மன வளத்தைப் பெருக்கினீர்கள்—பூரிப்படைகிறேன் சர்க்கார் தந்த பத்து நாள் சிறைத்தண்டனை, திராவிட முன்னேற்றக் கழகத்தின் நரம்புகளுக்கு முறுக்கேற்றும் நல்லதோர் பானமாக அமைந்தது—நன்றி செலுத்துவோம் அதற்காக! சென்றேன், வந்தேன்—சேர்ந்து பணியாற்றுவோம் வாரீர், என்று அழைக்கிறேன்.

நமது பணி, யாது—என்ற கேள்விக் குறி இல்லை—தெளிவாக இருக்கிறது திட்டம்—எனவே புதிய பொறுப்புகளை அறிந்து பணி புரிய வாரீர்!—என்று அழைக்கிறேன். உரிமைப் போர்ப் பாதை, வகுத்தாகிவிட்டது! தீரமிக்க தோழர்காள்! திராவிடம் பெற வாரீர்!! — என்று அழைக்கிறேன் — வருவீர்களா, என்ற கேள்விக்குறி மனதைக் குடையும் நிலையில் அல்ல—வருவீர்கள் என்ற திடநம்பிக்கையுடன்!

அண்ணாதுரை.

கோவையில்

22—10—50

மாலை

தலைமைக் கழகக் கட்டிட நிதி அளிப்பு

பொதுச் செயலாளர் சி. என். ஏ. கலந்துகொள்வார்.

—பெத்தாம்பாளையம் பழனிச்சாமி

சென்னை மாவட்ட தி. மு. கழக. பொது நிர்வாகிகள் கூட்டம்

9—10—50 திங்கள் மாலை 6—மணிக்கு தங்கசாலை 202-ம் எண். கழக கட்டிடத்தில். மேற்படி கூட்டம் நடைபெறும். மாவட்டக் கழக நிர்வாக உறுப்பினர்கள், கிளைக் கழகங்களின், செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர், விளம்பர உறுப்பினர், ஆகியோர் மட்டும், தவறாது வந்து கலந்துகொள்ள வேண்டுகிறேன். அதுசமயம் முக்கிய விஷயம் பற்றி கலந்து பேசி முடிவு செய்யப்படும்.

கே. கோவிந்தசாமி

ஆளவந்தாரின் அடக்குமுறை தர்பார்!

திருவாரூரில் தடையுத்தரவு

மக்கள்மீது தடியடி

கழகத்தோழர்கள் கட்டுப்பாடு

28—9—50 அன்று திருவாரூர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆண்டுவிழா கொண்டாடுவதென சிறந்த முறையில் விளம்பரங்கள் செய்யப்பட்டிருந்தன. கூட்டம் நடைபெற விருந்த தெற்குவீதி முனையில் மாலை 4-மணிக்கே ஏராளமான மக்கள் குழுமிவிட்டனர். நாகை, மாயவரம், சிதம்பரம், தஞ்சை, கொரடாச்சேரி, குளிக்கரை, திருத்துறைப்பூண்டி, அதிராம்பட்டினம் முதலிய பல இடங்களிலிருந்தும் ஏராளமான தோழர்கள் கூட்டத்தைக் காண வந்திருந்தனர். கூட்டத்தில் சொற்பொழிவாற்றுவதற்காக தோழர் மு. கருணாநிதி, காரைக்குடி கண்ணதாசன், 'திராவிட நாடு' துணை ஆசிரியர் இராம. அரங்கண்ணல், அதிராம்பட்டினம் என். எஸ். இளங்கோ முதலிய பிரச்சாரத் தோழர்களும் வந்து சேர்ந்தனர்.

இந்நிலையில் மாலை 5-மணிக்கு பிரச்சாரத் தோழர்கள் தங்கியிருந்த விடுதிக்கு போலீஸ் அதிகாரிகள் வந்து, அவர்களுக்கு 144-தடையுத்திரவை 'சர்வ்' செய்ததோடு, திருவாரூர் திராவிட முன்னேற்றக்கழக செயற்குழு உறுப்பினர்களான தோழர்கள் டாக்டர். விசயராகவன், கே. எம். ஜமால், சி. டி. மூர்த்தி, பி. வாஞ்சிலிங்கம், ஆர். ஆர். கிருஷ்ணன், பி. சேதுபதி, ஆர். சிங்காரம், நாகப்பன், ஜமீர், ஆர். எம். நடராசன், ஏ. பி. பாண்டியன் ஆகியோருக்கும் மேற்படி தடையுத்திரவு சாதரா செய்யப்பட்டது.

தோழர்கள் யாவரும் ஆத்திரத்தோடு தடையுத்தரவை மீறத்துடித்தனர். தடையுத்தரவு குறித்து கேள்விப்பட்ட பல்லாயிரக் கணக்கில் குழுமியிருந்த பொது மக்களும் மனமொடிந்து, காங்கிரஸ் ஆட்சியின் போக்கு குறித்து பேச ஆரம்பித்து, கலையாது நின்றனர்.

மத்தியத் தலைமைக்கழகத்திலிருந்து உத்தரவு பெறாமல் கட்டுப்பாட்டைமீறி, தான்தோன்றித்தனமாக எதுவும் செய்தல் கூடாது என்ற முடிவில் 144-மீறவதில்லையென்ற முடிவு தி. மு. கழகத்தின் கமிட்டியால் செய்யப்பட்டது.

மணி-8 ஆகியும், பொதுமக்கள் கலையாது நின்றனர். கூட்டத்தைக் கலைக்க ஆயுதம்தாங்கிய விசேஷப் போலீஸ் படையினர் கொண்டுவரப்பட்டு, கூட்டத்தைக் கலைப்பதற்காக தடியடிப்பிரயோகம் செய்தனர். நாலா முனைகளிலும் தாக்கி சிதற அடித்தார்கள். இந்நிலையில் தி. மு. க. செயலாளர் டாக்டர் விசயராகவன் கூட்டத்துக்கு வந்து பொதுமக்களை அமைதியாகக் கலைந்து போக வேண்டினார். நகரமெங்கும் தடியடிதர்பாரைபற்றிய பேச்சாகவேயிருக்கிறது.

(நிருபர்)

குன்றத்தூரில் 144

கழகத்துக்கு வாய்ப்பூட்டு

'சுயராஜ்ய' இலட்சணம்!

திராவிடரியக்கத் தலைவர்களைச் சிறைபிலடைத்ததைக் கண்டிக்க, 28—9—50 அன்று, ஸ்ரீபெரும்புதூர் தாலுக்கா, குன்றத்தூரில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் பொதுக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அன்று காலையில் தலைவர்கள் விடுதலையாயினர் என்ற செய்தி கிடைக்கவே கண்டனக் கூட்டத்தை பாராட்டுக் கூட்டமென்று, விரிவான முறையில் விளம்பரம் செய்திருந்தனர்.

கூட்டம் துவங்க சிறிது நேரத்துக்கு முன்பு போலீஸ் சப்இன்ஸ்பெக்டர் தமது சகாக்களுடன் வந்து தி. மு. க. செயலாளர் தோழர் டி. என். நடராசனையும், தலைமை தாங்கவிருந்த தோழர் டி. எம். திருநாவுக்கரசையும், 144-தடையுத்தரவைக் காட்டி, கூட்டம் நடத்த அனுமதியில்லையென்று சொன்னார்.

இந்நிலையில் கூட்டம் நடத்த அமைக்கப்பட்டிருந்த பந்தலைப் பிரிக்குமாறும், ஒலிபெருக்கியை அவிழ்க்குமாறும் அதிகாரிகள் கூறியதோடு கழகத் தோழர்கள் து. தணிகாசலம், இப்ராஹிம் தேவராஜன் ஆகியோரிடமிருந்த கொடிகளையும் வாங்க முயன்றனர். தோழர்கள் 'கொடியைத் தர முடியாது' என கட்டாயமாக மறுத்துவிட்டனர்.

சென்னையிலிருந்து பேச்சாளர்களான காஞ்சி. மணிமொழியார், என். வி. நடராசன், கே. கோவிந்தசாமி முதலியோர் 7-மணிக்கு வந்து சேர்ந்தனர். ஆத்திரமடைந்திருந்த மக்களுக்கு ஆறுதல் சொல்லி, விரைவில் தலைமைக்கழகத்தின் அனுமதியோடு, தடையுத்திரவை மீறுவோம் என்று உறுதிதந்தனர். 'அடக்குமுறை ஆட்சி ஒழிக' என்ற முழக்கத்தோடு, ஆயிரக்கணக்கில் கூடிக்கிடந்த மக்கள் கலைந்து சென்றனர்.

மத்யசர்க்கார்
முக்கிய
காங்கிரஸ் மந்திரிகள்!

பண்டித நேரு
பட்டேல்
அபுல்கலாம் ஆசாத்
இராசகோபாலாச்சாரியார்
ஜகஜீவன்ராம்
ரபி அகமத் கித்வாய்
ராஜகுமாரி அம்ருத கேளரி
காட்கில்
கோபால்சாமி அய்யங்கார்
ஹரிகிருஷ்ண மெஹ்தாப்
கே. எம். முன்ஷி
ஸ்ரீ பிரகாசா
சி. சி. பிஸ்வாஸ்
சந்தானமய்யங்கார்
திவாகர்
சத்திய நாராயண சின்ஹா
அஜீத் பிரசாத் ஜேயின்

தஞ்சையிலும் அதேகதி!

'அமைதி'யைக்காக்கும் அழகு!!

30—9—50 அன்று தஞ்சை திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களான டி. சோமு (செயலாளர்), ஏ. வி. பதி, எஸ். என். பெத்தண்ணன் சந்திரப்பூ முதலானவர்கள் மீது 144 தடையுத்திரவு போடப்பட்டிருக்கிறது. இதேபோல திராவிட கழகத் தோழர்கள் மீதும் தடையுத்திரவு 'சர்வ்' செய்யப்பட்டிருக்கிறது. பொதுஜன அமைதியைக் காக்கவே இந்நடவடிக்கை யெடுப்பதாக, இல்லாத பழிகளைச் சேர்த்து, சப் டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் தடையுத்திரவை பிறப்பித்துள்ளார்.

சென்னை மக்களே!
25-10-50
ஆச்சாரியார் வருகிறார்!!
தயாராகுங்கள்
கருப்புக் கொடியுடன்!
தி. மு. க.

ஏஜண்டுகளுக்கு

அதிக பிரதிகள் விரும்புவோர் செவ்வாய்க்கிழமைக்குள், தகவல் தெரிவிக்கவும். அப்போது தான் அவர்கள் விருப்பத்தை நிறைவேற்ற இயலும்.

நிர்வாகி
"திராவிட நாடு"

அதிராம்பட்டினத்திலும் அப்படியே!

'அகிம்சா ஆட்சி'யின் அழகு!

பேச்சுரிமை பறிபோகிறது

29—9—50 அதிராம்பட்டினம் தி. மு. க. சார்பில் கூட்டப்பட்டிருந்த கூட்டத்தில் தோழர் மு. கருணாநிதி, கவிஞர் கண்ணதாசன், தோழர் என். எஸ். இளங்கோ முதலியோர் பேச விளம்பரம் செய்யப்பட்டிருந்தது. ஏராளமான கூட்டம் கூட ஆரம்பித்துவிட்டது. ஊர்முழுவதும் மக்கள் கூட்டம் இதுவரை காணாத அளவிலே திரண்டிருந்தது. தோழர்கள் மூவரும் ஊருக்குள்ளே காரிலே வந்துசேர்ந்ததும் அதிராம்பட்டினம் போலீஸ் சப்இன்ஸ்பெக்டரால் 144 உத்திரவு வழங்கப்பட்டது. பொதுமக்களின் உணர்ச்சி பெருக்கினால் சட்டத்தை மீறுவோம் என கோஷமிட்டனர். தொண்டர்களும் இயக்கநண்பர்களும் தங்கள் தங்கள் வீட்டில் சிறை செல்ல 'சொல்லிக்' கொண்டுவந்துவிட்டார்கள்—பின்கழக நண்பர்கள் கூடி பொதுச் செயலாளரின் உத்தரவு இல்லாமல் தடையுத்தரவை மீறுவதுகூடாது என்றும், கட்டுப்பாடு தேவையென்றும், பொதுமக்கள் அமைதியாக கலைந்துசெல்லவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. ஆயினும் ஆயுதம் ஏந்திய போலீஸ் வீரர்கள் ஊர்சுற்றி வந்தபோதும் ஏராளமான பொதுமக்கள்கூடி, "நம்மவர்களின் ஆட்சி அழகை காணீர்" எனக்கூறிக்கொண்டே கும்பல்கும்பலாக நின்றனர். பின்னர் தோழர்கள் மு. கருணாநிதி, கண்ணதாசன், இளங்கோ மூவரும் சிவகங்கை மாநாட்டிற்கு காரில் புறப்பட்டபோது ஏராளமான தொண்டர்களும் இயக்கஅன்பர்களும், பொதுமக்களும் கூடி வழி அனுப்பிவைத்தனர். இரண்டொரு தினங்களுக்குமுன் காங்கிரஸ் M. L. A. ஒருவர் பேசிய கூட்டத்திற்கு கட்டுப்பாடாக பொதுமக்கள் போகாதிருந்த காரணத்தாலும் 50 பேர்கூட இல்லாத அந்தக் கூட்டத்திலே அவர் பேசிய அவமானத்தாலும், மாறாக நம்இயக்கத்திற்கு இருக்கிற செல்வாக்கை கண்டும், அதிகாரிகளுடன் கலந்து 144 தடையுத்தரவு வாங்கப்பட்டதாகத் தெரிகிறது.

(க. தி.)

பேச்சுரிமைப் போர் முரசு ஒலித்தது—144 தடையுத்தரவு மீறப்படும்!

நாடெங்கும் எழுத்துரிமைக் கிளர்ச்சி துவங்கும்

இராமநாதபுர மாவட்ட தி. மு. க. முதல் மாநாட்டின் இரண்டாம் நாள் நடவடிக்கையின் கடைசியில் பொதுச் செயலாளர் அண்ணாதுரை, மாநாட்டின் வெற்றிக்குக் காரணமாயிருந்தவர்களைப் பாராட்டிப் பேசினர். திராவிடரியக்கம் நாட்டில் வளர்ந்துவரும் வேகத்துக்கு சிவகெங்கையே ஒரு எடுத்துக்காட்டு என்று கூறினர்.

"பத்து ஆண்டுகளிருக்கும். இதே சிவகங்கையில் நானும் பெரியாரும் ஒரு பொதுக்கூட்டத்தில் பேச, அழைக்கப்பட்டிருந்தோம். பேச, வந்திருந்த எங்களை, ஊர்வலமாக, அழைத்துச் செல்ல இவ்வூர் நண்பர்கள் முடிவு செய்தார்கள். அதுபடி—நாங்கள் காரில் அமர்த்தப்பட்டு அழைத்துச் செல்லப்படுகிறோம். அன்று கண்ட காட்சி, இன்னும் நினைவிலிருக்கிறது. சிவகெங்கையின் கடை வீதிகளிலெல்லாம், இருமருங்கும், செருப்புகளைத் தொங்கவிட்டிருந்தார்கள். வரிசை வரிசையாக, கோர்த்து கட்டியிருந்தார்கள்! எங்களை அன்று வரவேற்ற, சிவகெங்கையையும் இன்று வரவேற்கும் சிவகெங்கையையும் கண்டால் மடுவுக்கும் — மலைக்குமுள்ள வித்தியாசமிருக்கிறது! செருப்புகளைத் தோரணங்களாகக் கட்டி வரவேற்றது மட்டுமல்ல, அது நடந்த சில ஆண்டுகளுக்கெல்லாம் மற்றொரு முறையும், இந்நகருக்கு வந்தேன். கூட்டத்தில் பேச எழுந்தேன். எனக்கு எதிரிலேயே, ஒரு காங்கிரஸ் பிரமுகர், இன்னொரு நாற்காலிபோட்டு உட்கார்ந்துகொண்டார். நான் பேச வாயெடுத்து ஒரு வார்த்தை கூறுவேன். அவர் உடனே, கூச்சல்போட்டு எதிர்ப்பார்! அப்பேற்பட்ட சிவகெங்கையில், அன்று எதிர்ப்பைக் காட்டிய சிவகெங்கையில் இன்று விழிப்பு! பிரம்மாண்டமான பந்தல் — கண்ணைக் கவரும் அலங்காரம்—எட்டியதூரம் வரை மக்கள் வெள்ளம்!!

இந்த மாற்றத்தை நாடாளும் சர்க்கார் காண வேண்டும். கண்டால்மட்டும் போதாது, 'எப்படி ஏற்பட்டது இவ்வளவு ஆதரவு இவர்களுக்கு' என்பதையும் சிந்தித்துப்பார்க்க வேண்டும். அவர்களது சிந்தனையைத் திறக்கவேண்டுமென்பதற்குத்தான் இதுபோன்ற மாவட்டமாநாடுகள் நடத்தப்படுகின்றன. இம்மாநாடுகளை, நாட்டின் நிலையை விளக்கும், நாடிகளாக, நாடாள வந்தோர் கருத வேண்டும்.

பல்லாயிரக்கணக்கில் மக்கள் கூடியுள்ளார்கள். அவர்கள் மனதிலும், செயலிலும் புதுமை தாண்டவமாடுகிறது. புதுமலர்ச்சி காணக்கிடக்கிறது! புதியதொரு மாற்றம் தென்படுகிறது — எனினும் ஒழுங்கே உருவாக, அமைதியே உயிராக இருக்கிறார்கள். இத்தகைய மக்களின் மகத்தான குரலான, நமது கட்சி, துவேஷத்தை உண்டுபண்ணி நாட்டில் அமைதிக்குக் குந்தகம் விளைவிக்கிறதாம்! கூறுகிறார்கள்!!

சட்டத்தை சமாதானம்நிலைநாட்டப்படவேண்டுமென்பதை, ஒழுங்கு நாட்டில் நிலவச் செய்வதில் கவலையும் சிரத்தையும் கொண்டோர் எம்மைத் தவிர, வேறு யார்? 14 ஆண்டுகள் ஆட்சிபீடத்தமர்ந்திருந்த கட்சியின் வழித்தோன்றல்களாகிய நமக்கு, தந்திக்கம்பியை அறுத்து, தபால்வண்டியைக்கொளுத்தி, 'ஆகஸ்டு' செய்த இந்த ஆளவந்தாரைவிட, சட்டத்தின் மேன்மை, ஒழுங்கின் அவசியம் நன்றாகத்தெரியும். ஆகவேதான், நாங்கள் நாட்டில் அமைதியைக் காப்பதில் கவனம் செலுத்துகிறோம்—அக்கரை காட்டுகிறோம்—அதிசிரத்தை கொள்ளுகிறோம். அமைதியின் காவலர்களாக உலவும் எங்களுக்கே சிறைத்தண்டனை என்றால், சட்டத்தைப்பற்றிக் கவலைப்படாதவர்களை எப்படி நடத்தும் இந்த சர்க்கார்?

என்ன குற்றம் செய்தேன்—நூல் எழுதினேன். அதுவும் இப்போதல்ல, நான்கு வருடங்களுக்கு முன்! எழுதியதும் நூலாக அல்ல, தனித் தனியாக! சொந்த அபிப்பிராயங்களைக் கூட அல்ல—வித்தகர்கள், இன ஆராய்ச்சிக்காரர்கள், சரித்திர வல்லுநர்கள் சொல்லியதைத் தொகுத்து எழுதினேன். 4ம் 4ம்=12 என்று எழுதவில்லையே! இருந்தும், இவர்களுக்கு என் மீது துவேஷம் பொறாமை!! கோர்ட்டுக்கு இழுத்தடித்து, சிறைக்குள்ளே தள்ளி, பின்னர் தஸ்தாவேஜுகளைப் புரட்டி, விடுவித்திருக்கிறார்கள்!!

நமது முன்னேற்றக் கழகம் தோற்றுவிக்கப்பட்ட 17—9—'49 அன்றே, ஆளவந்தாரின் இந்த முயற்சி முளைத்தது. அன்று ஆரம்பித்த முயற்சி, சரியாக ஓராண்டு முடிந்ததும், முடிவடைந்திருக்கிறது.

கழகம் துவக்கப்பட்ட அன்று மாலை சென்னை வண்ணாரப் பேட்டையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்துக்குச் சென்று கொண்டிருக்கிறேன். ஒரு போலீஸ் அதிகாரி சாதாரண உடையில் என்னைச் சந்தித்து 'இலட்சிய வரலாறு' 'ஆரிய மாயை' நூல் எழுதினீர்களா, என்று கேட்டார். அன்று ஆரம்பித்த வழக்குகள் நடைபெற்ற முறை விசித்திரமாக இருக்கும். இலட்சிய வரலாறு வழக்கு சென்னையில்! திருச்சியில் ஆரிய மாயை கேஸ்!

எனக்குள்ள, எல்லா வேலைகளையும், ஒதுக்கி வைத்துவிட்டு அங்கிருந்து வருவேன்—மீண்டும் இங்கிருந்துபோவேன். இப்படி, வழக்குகள்மூலம் நான் பட்டபாடுகளை நினைத்தால், வேண்டுமென்றே, இந்த ஆளவந்தார் எடுத்துக்கொண்ட விசேஷ முயற்சியில்லாது வேறென்ன?

18ந்தேதி, தண்டிக்கப்பட்டோம். சிறைக்கு அனுப்பினர்கள். பின்னர் மீண்டும் திறந்துவிட்டு விட்டார்கள். காரணம், தஸ்தாவேஜுகளை பரிசீலனை செய்து, விடுவித்தார்களாம், வழக்கு ஓராண்டு நடைபெற்றபோது தஸ்தாவேஜுகளில் தலையிட முடியாத சர்க்கார் இப்போது மட்டும் ஏன் தலையிட்டது? என்ன அவசரம் வந்தது? இது யோசிக்கப்படவேண்டிய சங்கதியாகும்.

நாட்டில், நாங்கள் உள்ளே பூட்டப்பட்டதும் நடைபெற்ற நானாவித கிளர்ச்சிகளைக் கண்ட பின்னர், காலங் கடந்து தஸ்தாவேஜுகளிடம் போயிருக்கின்றனர்.

உலக வரலாற்றை நாம் படித்திருக்கிறோம். சரிந்துபோன சர்க்கார் அத்தனையும் காலங் கடந்துதான் ஒவ்வொன்றையும் படித்திருக்கிறது. அதைப்போலவே, இவர்களும் படித்திருக்கிறார்கள். இந்த சர்க்காரிடம் நான் ஆத்திரப்படவில்லை—பரிதாபப்படுகிறேன்!

நாமென்ன, பிற அரசியல் கட்சிகள் போன்றவர்களா? 'எலக்ஷனை'ச் சொல்லி, ஏதாவது ஆசைப்படுவதற்கு.

கட்சிகள் என்றிருந்தால், அரசாங்கத்தைக் கைப்பற்றவும், பதவியிலமரவும், திட்டங்களோடு நடவடிக்கைகளை எடுக்கும். நாம் அப்படியல்லவே! தேர்தல் வேண்டாமென்கிறோம்—பதவி, பட்டங்களை வெறுக்கிறோம்.

தெளிவாகச் சொன்னால் சமுதாய நன்மைக்கான குறுக்குப் பாதையில் செல்கிறோம். ஆள்வோருக்கும், மக்களுக்கு மிடையிலே நிற்கிறோம். இருந்தும், இந்த சர்க்கார் நம்மைத் துவேஷக் கண்களோடு பார்க்கிறது காரணம், நாட்டில் நமது இயக்கம் புயல் வேகத்தில் பரவுவதுதான்.

நாம் என்ன பிர்லாவிடமிருந்து பணம் பெறுபவர்களா? அல்லது டாடாவின் 'செக்' நமக்கு வருகிறதா? அல்லது—டால்மியாவின் பணப் பெட்டி நமக்காகத் திறக்கப்படுகிறதா? நம்மிடமிருந்த ஓரிரண்டு எட்டையாபுரம் மிட்டாதாரும், பெத்தாபுரம் ஜமீனும், ஜரிகை குல்லாய்களும் தான் 'சேலத்தால்' மிரண்டோடி விட்டனரே!

இருந்தும், எப்படி நமது இயக்கம் புயல் வேகத்தில், ஆளவந்தார் பொறாமைப்படும் அளவில், பரவுகிறது? எப்படி இந்த ஜீவசக்தி, ஏற்பட்டது? மாலை போட்ட மந்திரிகள் மூக்காடிட்டு திரியவேண்டிய அளவுக்கு ஜீவசக்தியை நாம் உண்டாக்கியிருக்கிறோம—மக்களிடையில். அதைக் கண்டு மருள்கிறார்கள்! நமது இலட்சியம் அரசியல் வேட்டையல்ல—நாமோ களத்திலே பலியாகத் துடிக்கும் பட்டாளம்! நமது குறிக்கோள், நமது மூதாதையர் ஆண்ட நாட்டை, மீண்டும் பெறுவது. நமது ஆசை இரவல் மோட்டாரில் செல்வதல்ல; சத்திரத்துச் சாப்பாடு—அதுவும் 'டெல்லி' சமையல்காரன் செய்து போடுவது—க்கு ஏங்கியிருப்பதல்ல!

இலட்சிய வீரர்கள் நாம்! உரிமை வேட்கையோடு உலவும் ஜீவசக்தி படைத்தோர், நமது இயக்கத்தவர். இதை அடக்க முடியாது என்னை அடக்கிப் போட்டாலும், எனது இயக்கத்தவரை—தடுத்துப்போட முடியாது! 'பேசாதே! எழுதாதே' என்று, அடக்கிவிட முடியாது! இதை, இந்த ஆட்சியாளர் கவனத்தில் கொள்ளட்டும். பாலைவனத்தை சோலையாக்குபவர்கள் எமது தம்பிமார்கள்! தமிழ் அ...ள் தாழ்வாரத்து சொத்து!!

அதை அவர்களிடமிருந்து பிரிக்கமுடியாது— பிரிக்கவும் விடமாட்டார்கள். ஆட்சி உன்னிடம்! பட்டாளமுமிருக்கிறது. போலீஸ் படை. துப்பாக்கியும் வைத்திருக்கிறாய். நீதிபதி உன்னிடத்திலே. ஜெயிலும் உன்னிடத்திலே! இதையெல்லாம் காட்டி, மிரட்டலாம். ஆனால், ... தோல்வி தான் கிடைக்கும்!

என்னிடமிருந்து, 'ஆரிய மாயை' வழக்கில் விதிக்கப்பட்ட 700 அபராதமும் வசூலிக்கப்படுமாம். சொல்கிறார்கள் சர்க்கார் சார்பில் என்னிடம், எனக்கென இருப்பது ஒரே கார். அதை ஜப்தி செய்வதன் மூலம் வேண்டுமானால், வசூலிக்கலாம். ஆனால், அபராதம் என்ற முறையில் அரைக்காசு கூட என்னிடமிருந்து, ஏ சர்க்காரே, நீ பெறமுடியாது. என்னிடமிருந்து அந்த மோட்டார் ஒன்றுதான்! வேண்டுமானால் ஏலம் போட்டுப்பார்! அது தெரியும்—அது காராக உலவுமா! அக்குவேறு, ஆணி வேறாக ஆகும் என்பது!

ஏதாவது வைத்திருப்பவர்களிடம், வேண்டுமானால் அதை ஜப்தி செய்யலாம். ஆனால், எதுவுமேயில்லாத, ஆயிரமாயிரம் வீரர்களிருக்கிறார்களே! அவர்களிடம் எப்படி வசூலிக்க முடியும், உன்னால். என்னைச் சிறைக்குள் வைத்து, கவுரவத்தைக் காக்க முயன்ற ஆட்சியே, முடியுமா உன்னால். கேட்டால், கொடுக்கத்தான் போகிறார்களா, அவர்கள்! இருந்தால்தானே கொடுக்க?

வகுப்புத் துவேஷிகள் என்று வாய் கூசாது, கூறுகின்ற ஆளவந்தாரைக் கேட்கிறேன். யார் வகுப்புத் துவேஷி? நாங்களா — மனதை வைத்துச் சொல்!—நாங்களா?

வகுப்புத் துவேஷம் வளர்ப்பதே எங்கள் நோக்கமென்றால், கிடைத்த சந்தர்ப்பத்தை நழுவ விட்டிருக்க மாட்டோமே நாங்கள்!

பொன்னான சந்தர்ப்பம்—கோட்ஸே காந்தியைச் சுட்டுக்கொன்ற நேரம். அந்த நேரத்தை, நாங்கள் பயன் படுத்திக் கொண்டோமா? கோட்ஸே பிறந்த வகுப்பைச் சொல்லி துவேஷத்தீ பரவச் செய்தோமா? திருச்சி ரேடியோவில் "காந்தியாரைக் கொன்றவன் ஒரு தனிப்பட்ட ஆள். அதற்காகச் சாதியின்மீது பாயாதீர்கள்" என்றே பேசினேம். இதுவா, வகுப்புத்துவேஷம்?

கோல்ஹாப்பூர் — நாங்களில்லாத இடம்—அங்கே, அக்கிரகாரத்துக்கு தீ! அட்டகாசம் மூண்டது. பட்டாளம் போய்தான் அதையடக்க முடிந்தது. நாங்களில்லாத அங்கே அப்படி? நாங்கள் உலவும் இங்கே அதுபோல நடந்ததா? அது யாரால்—எம்மால்தானே! இதற்குப் பரிசா, வகுப்புத்துவேஷி பட்டம்—வழக்கு—சிறைவாசம்!

துவேஷம் ஊட்டுவதென்பது சுலபமான வேலை. அதைச் செய்யத் தெரியாதவர்களுமல்ல நாங்கள். ஆனால் அதை நாங்கள் விரும்பவில்லை. நாட்டில் அராஜகமும் அட்டூழியமும் தலைவிரித்தாடுவதைக் காண சந்தோஷப்படுபவர்கள் அல்ல நாங்கள். இங்குள்ள பார்ப்பன நண்பர்கள் எங்கள் விரோதிகளுமல்ல. இருந்தும், ஏதோ குற்றஞ் சாட்டி, எங்களை அடக்கப்பார்க்கிறாய்! இது, முடியாது. நீதியும் நேர்மையுமே வெல்லும். ✱

புலிநிகர் மாந்தர் நாம், புல்லர்கள் உணரட்டும்

ஓயாது இனி, நமது உரிமைப் போராட்டம்

இராமநாதபுர மாநாட்டில் பொதுச் செயலாளர்

★ தடையுத்திரவை மீற அனுமதி கொடுங்கள். வாய்க்குப் பூட்டிடும், இந்த வக்கிரபுத்தி கொண்ட சர்க்காரின் போக்கைச் சகித்துக் கொள்ள முடியாது. எங்களை அனுமதியுங்கள்" என்று, என்னிடம் எனது தம்பிமார்கள், இன்று தெரிவித்தார்கள். அதை வலியுறுத்தி மாநாட்டிலும், தீர்மானம் கொணர்ந்து, ஆத்திரத்தோடு பேசினர். இனி, எந்த ஊரில் 144 போட்டாலும் எனது அனுமதிக்காக நீங்கள் காத்திருக்க வேண்டாம். எனது அனுமதி, இதோ, தரப்பட்டு விட்டது. பேச்சுரிமை காக்க, நாம் எந்த விலையும் கொடுக்கத்தான் வேண்டும். சந்தேகம் வேண்டாம்! நாம் யார் என்பதை, இந்த அரசாங்கம் உணரச் செய்வோம்.

★ இனி எந்த ஊரில், எந்தப் பேச்சாளராவது, தடையுத்திரவு போடப்படுமேயானால்—தயங்கவேண்டாம். நான், என்ன சொல்வேனோ என்று எண்ணவேண்டாம். 'அரசாங்கம் பேசக் கூடாது என்றது—மீறிவிட்டேன்' என்று, தகவல் அனுப்புங்கள். அமைதியோடு பேச்சுரிமை காக்க, நாம், அறப்போர் துவக்கத்தான் வேண்டும். பிடிக்கட்டும் அடைக்கட்டும் இந்த சர்க்கார்! துப்பாக்கியைக் காட்டட்டும் இந்த அரசாங்கம்! தொலைத்துவிடுவேன் என்று மிரட்டுவார்கள்—தொல்லையெல்லாம் தருவார்கள். கவலை வேண்டாம். காரியமாற்றும் தம்பிமார்களே,

இனி,

எங்கு 144 போட்டாலும்,

மீறுவோம்!

எங்கெங்கு 144 போடப்படுகிறதோ, ஆங்காங்குள்ள தோழர்கள், தங்களுக்குள்ளாகவே கமிட்டியமைத்துக் கொண்டு கட்டுப்பாடான முறையில், பேச்சுரிமை காக்கப் புகவேண்டும்.

★ நாம், இரவு நேரத்தில் கிளர்ச்சி செய்பவர்களல்ல! இருட்டிலே சதிவேலை நடத்துபவர்களல்ல! தெரிவித்துவிட்டுச் செய்கிறோம்—'உரிமையை மறுக்கிறாய். அதைப் பெறத் தயங்கோம்' என்று பகிரங்கமாக அறிவித்துவிட்டுச் செய்கிறோம். ஆம் இந்த அவலட்சண ஆட்சி நம்மை, யாரென்று தெரியச் செய்வோம்!"

சிவகெங்கை மாநாட்டின்போது, ஆங்காங்கு கழகத்தோழர்கள்மீது ஆளவந்தாரால் போடப்படும் தடையுத்திரவுகள் குறித்து கண்டித்துப் பேசினர் தி. மு. க. பொதுச் செயலாளர்.

பேச்சுரிமை காக்க, தடையுத்திரவு போட்டால் மீறவேண்டும் என்று அறிவித்த சி. என். ஏ., "எழுத்துரிமை காக்கவும், இனி நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் உருவான காரியங்கள் நடைபெறத் தான் போகிறது," உணரட்டும் இந்த ஆட்சியாளர் என்று ஆவேசத்தோடு, வெளியிட்டார். அதன் பகுதி கீழே தரப்படுகிறது.

"அடக்குமுறை வளர்ந்துகொண்டே போவதை நாம் அனுமதிக்க முடியாது. ஆளவந்தாருக்கு சுதந்திரம் என்பதன் அருமையை அறியச் செய்யவேண்டிய அவசரம் ஏற்பட்டிருக்கிறது. ஆட்சி போதையில் தலைகால் தெரியாமல் நடந்துகொள்ளுகின்றனர். அதன் விளைவாகவே, எழுத்துரிமை பேச்சுரிமை மீது பாய்கின்றனர். பேச்சுரிமை காக்க, இந்த அரசாங்கத்தின் 144ஐ மீறுவது தவிர வேறு வழியில்லை. அதேபோல எழுத்துரிமை காக்கவும், செய்யப்பட வேண்டிய வழிவகைகளை, கோவில்பட்டி மாநாட்டிலேயே, வெளியிட்டிருக்கிறேன். அதைக் காரியமாற்றுவதில்தான் நமது கவனம் செல்லவேண்டும்.

தடை செய்யப்பட்ட நூற்களை, விலை கூறி விற்கவும்,

தடை செய்யப்பட்ட 'இரணியன்' போன்ற நாடகங்களை நடத்தவும்,

பலர் துடிக்கின்றனர். 'அனுமதி வேண்டும்' என்று ஆவலோடு கிடக்கின்றனர். அவர்களைக் காண மகிழ்கிறேன்! இரு கைகளோடு வரவேற்கிறேன்! உரிமைக்காக உயிரையும் தத்தம் செய்வோம் என்று முழக்கமிடும் அவர்கள் நமது உழைப்பின் செல்வங்கள். அத்தகைய வீரர்கள், இனி நடவடிக்கையில் இறங்கவேண்டும். ஆங்காங்குள்ள வீரர்கள் கைகளில் 'ஆரியமாயை' போன்றவைகளை நாடு காணட்டும்! 'இரணியன்'களாக எனது தம்பிமார்கள் உலவத்தான் போகிறார்கள்! இந்த நடவடிக்கைகளில் ஈடுபடுமுன், தலைமைக் கழகத்துக்கு எழுதி அனுமதி பெற்றுக் கொள்ளுங்கள்.

முறைகளையும் வழிகளையும் கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள்.

நமது இலட்சியங்களைக் காப்பாற்ற, இனி தியாகத் தழும்புகள் ஒவ்வொருவர் உடம்பிலும் காணப்படவேண்டும். உரிமைகளுக்குப் போராடும் நம்மை, மிரட்டும் இந்த சர்க்கார்! மிஞ்சினால் சிறையிலே போடும்! சிறை ஒன்றும் பாலைவனமல்ல—அங்கும் ஆயிரக் கணக்கில்தான் மனிதர்கள் உள்ளனர். அதோடு அங்கு பஞ்சம் எதுவுமில்லை!

அண்ணனையா தண்டித்தாய்—நானும் வந்துவிட்டேன் என்று தம்பிகள் கிளம்பட்டும்!

கணவனையா தண்டித்தாய், இதோ என்னையும் அடை என்று அவர்களின் மனைவிமார்கள் எழும்பட்டும்!

குடும்பம், குடும்பமாக இந்த கொடுங்கோலாட்சியின் சிறைக்கூடத்தை நிரப்புவோம்! நமது இலட்சியம் வலுப் பெற, இதெல்லாம் செய்யத் தயங்க மாட்டோம்!

நாட்டின் அமைதியைக் குலைக்கவோ, கெடுக்கவோ அல்ல நாம் இருப்பது, பணிபுரிவது நாட்டின் வாழ்வுக்காக! வாழ்வைப் பெற எந்த விலையும் கொடுக்கத்தான் வேண்டும். கோழைகளல்ல — செயல் வீரர்கள் என்பதை விரைவில் இவர்களுக்கு காட்டுவோம்!

சந்தர்ப்பம் நெருங்கிக் கொண்டேயிருக்கிறது. இனி, தாமதிக்க நேரமில்லை! ✱

பொதுச் செயலாளரைச் சிறையில் தள்ளியதைக் கண்டிக்க 23—9—50ல் சேலத்தில் நடந்த பொதுக் கூட்டக் காட்சி.

தீர்மானங்கள்

(1) திராவிட நாட்டிற்கும் திராவிட பெருங்குடி மக்களுக்கும் தமிழ் மொழிக்கும் பல்லாண்டுகள் தொண்டு செய்து அந்தப் பணியைத் தொடர்ந்து நிறைவேற்றிக் கொண்டிருக்கும் நிலையில் சேலம் கல்லூரித் தலைவர் தோழர் இராமசாமி அவர்களும் தமிழ்க்கடல் மறைமலை அடிகளாரும் இயற்கை எய்தியது குறித்து இம்மாநாடு துக்கமுறுவதுடன் தனது ஆழ்ந்த அநுதாபத்தை அன்னார் குடும்பத்தினருக்கும், அவர்களைப் பிரிந்து வாடும் நண்பர்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறது.

(2) பொதுவாக சென்னை மாகாணத்திலும் குறிப்பாக இராமநாதபுர மாவட்டத்திலும் உணவு நெருக்கடியின் காரணமாக மக்கள் பட்டினியால் மடியுமளவுக்கு வாழ்வு சீரழிந்து வருவதால் வெளிநாடுகளில் இருந்து உணவை இறக்குமதி செய்ய சென்னை அரசியலாருக்கு, டெல்லி சர்க்கார் இந்த நெருக்கடியான நிலையை உணர்ந்தாகிலும் அனுமதி தரவேண்டுமென்று எச்சரிப்பதுடன் சென்னை சர்க்காரும் இதற்கான முயற்சியை எடுத்து உணவு நெருக்கடியைத் தீர்க்க முயற்சிக்க வேண்டுமென்று இம்மாநாடு வற்புறுத்துகிறது.

(3) பொதுவாக திராவிட சமுதாயத்திற்கும் சிறப்பாகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும், அவர்களது வாழ்வுக்கும் மேம்பாட்டுக்கும் காரணமாய்—உயிர் நாடியாய் விளங்கிவந்த வகுப்புவாரி உரிமையானது நேற்று முளைத்த அரசியல் திட்டத்தின் துணைகொண்டு சாகடிக்கப்பட்டுள்ளது அதைமீண்டும் உயிர்ப்பிக்க முயன்று சுப்ரீம் கோர்ட்டுக்கு அப்பீல் செய்துள்ள சென்னை அரசியலாரின் நன் முயற்சியைப் பாராட்டுவதோடு அப்பீலிலும் நீதி கிடைக்கவில்லையானால் அரசியல் அமைப்பையே திருத்துவதற்கான பெரு முயற்சியை ஆண்மையோடு செய்ய வேண்டுமென்று சென்னை சர்க்காரை கேட்டுக் கொள்கிறது.

(4) சென்னை மாகாணத்தில் 5 லட்சம் கைத்தறிகளும், அவற்றை நம்பி வாழும் மக்கள் 30 லட்சம் பேர்களும் இருக்கிறார்கள், இதனால் இந்த மாகாணத்தில் கைத்தறித்துணிகள் மிகப் பெரிய அளவில் உபரியாக உற்பத்தியாகின்றன இதுபோலவே நம் மாகாணத்தில் மில் நூலும் உற்பத்தி செய்யப்படுகிறது சர்க்காரின் இப்போதைய டெக்ஸ்டைல் பாலிசியானது கைத்தறி ஜவுளி ஏற்றுமதியைத் தடுத்து நூல் ஏற்றுமதியைத் அனுமதித்துக் கொண்டிருப்பதால், கைத்தறி நெசவாளர்கள் நூல் கிடைக்காமலும், கிடைத்தால் ஒழுங்கான விலைக்கு கிடைக்காமலும் எப்படி நூல் கிடைத்தாலும் ஜவுளியை விற்க முடியாமலும் திண்டாடுகிறார்கள் எனவே சர்க்கார் கைத்தறி ஜவுளி ஏற்றுமதியை அதிகப்படுத்தியும், சாய நூல் கோட்டாவை நிறுத்தி வெள்ளை நூல் (Gray yarn) வழங்கும்படியும் உத்திரவு செய்ய வேண்டுமென்று சர்க்காரை கேட்டுக் கொள்கிறது.

(5) இராமநாதபுர மாவட்டத்தின் நடுவாகப் பல நகரங்களிருந்தும் இம்மாவட்டத்தின் தலைமையான அரசாங்க அலுவலகங்கள் பூராவும் மதுரையிலேயே இருப்பது, பல அசௌகரியங்களுக்கும் பொருள் நஷ்டத்திற்கும் காரணமாக இருப்பதால் அவைகளை உடனடியாக மாற்றி இந்த மாவட்டத்திலேயுள்ள ஏதாவதொரு நகரில் நிறுவவேண்டுமாய் சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறது.

(6) இராமநாதபுர மாவட்டத்திற்கு நீர்பாசன வசதியில்லாத காரணத்தால் போதுமான நிலங்களிலிருந்தும் சாகுபடி செய்ய முடியாத கேவலமான நிலை இருந்து வருகிறது, இக்குறை போக்கி நீர்பாசன வசதி தங்கு தடையின்றி கிடைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென இம்மாநாடு அரசியலாரை கேட்டுக்கொள்கிறது.

(7) எழுத்துரிமையைப் பறிக்கும் விதத்தில் அடக்குமுறைச் சட்டங்களை கையாண்டு வரும் அரசாங்கத்தின் போக்கை கண்டிப்பதுடன் தி. மு. கழகப் பொதுச் செயலாளரான அண்ணா அவர்கள் "ஆரியமாயை" எழுதியதன் மூலமாக வகுப்பு துவேஷத்தை மூட்டினர் என்று வழக்கு தொடுத்து ரூபாய் எழுநூறு

(அடுத்த பக்கத்தில்)

(முன் பக்கத் தொடர்ச்சி)

அபராதம் விதிக்கும் அளவுக்கும் அதனை அன்னவரிடத்திலிருந்து வசூல் செய்யும் அளவுக்கும் எழுத்துரிமையை பறித்திருக்கும் அரசாங்கத்தின் போக்கை இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது, இந்த நிலைமையை அரசாங்கம் மேலும் நீடிக்க விரும்புமேயானால் எழுத்துரிமை, பேச்சுரிமை ஆகியவற்றைக் காப்பாற்ற நேரடி நடவடிக்கைகள் எடுக்கவேண்டி நேரிடும் என்று அரசாங்கத்திற்கு எச்சரிக்கை செய்கிறது.

(8) பொதுவாக காங்கிரசாட்சியில் தொழிலாளர் வாழ்வு வேதனை மயமாகி வருவதோடு அவர்களது அடிப்படை உரிமைகளும் பறிக்கப்படுவதை இம்மாநாடு கண்டிப்பதோடு இந்திய பார்லிமெண்டில் கொண்டு வரப்பட விருக்கும் தொழில் மசோதா வாபஸ் வாங்கப்பட வேண்டும் என இம்மாநாடு வலியுறுத்துகிறது.

(9) (A) நாட்டிலே நடைபெற்று வரும் அறிவுப் பிரசாரத்தைத் தடை செய்யும் வகையில் பேச்சுரிமையைப் பறிக்கும் விதமாக அடிக்கடி பல ஊர்களில் 144 செக்ஷன்படி தடையுத்திரவு போடும் சர்க்காரின் போக்கை இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

(B) சர்க்காரின் இந்தப் போக்கைக் கண்டிக்கும் விதமாகவும் பேச்சுரிமையை நிலைநாட்டும் விதமாகவும் மேற்படி தடை உத்திரவுகளை மீறும் திட்டத்தைத்தயாரித்துக் கொடுக்கும்படி தி. மு. கழகப் பொதுச் செயலாளரை இம்மாநாடு வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறது.

(10) நாட்டிலே கடந்த பல ஆண்டுகளாகப் பரவிவரும் பகுத்தறிவுப் பிரசாரத்தின் பலனாக மக்கள் மதத்தின் பேரால் நடைபெறும் அநீதிகளை உணர்ந்து வருகிற நிலையில் ஓரளவுக்கேனும் பயன்படக்கூடிய விதமாக சென்னை சர்க்கார் கொண்டுவரும் அறநிலைய மசோதாவை மேலும் தீவிரமானதாக்கி, வைதீகர்களின் எதிர்ப்பை பொருட்படுத்தாமல் மேற்படி மசோதாவை நிறைவேற்றும்படி இம்மாநாடு சர்க்காரை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

ஈரோடு அப்பாவு, கோவை ராஜமாணிக்கம், தஞ்சை எ கே. வேலன், புதுக்கோட்டை ஞானமுத்து, சென்னை 'ஆரம்பக் கல்வி' ஆசிரியர் வீரராகவன், காஞ்சி மணிமொழியார், மதுரை ராஜமான், அருப்புக்கோட்டை எம். எஸ். இராமசாமி, அதிராம்பட்டினம் என். எஸ். இளங்கோ, இராம. அரங்கண்ணல், கோ. தண்டபாணி, மா. இளஞ்செழியன், தில்லை. வில்லாளன், குடந்தை எஸ். கே. சாமி, டி. கே. சீனிவாசன், பொன்மலை பராங்குசம், தூத்துக்குடி சிவசாமி, அழகாடி முத்து, கோவை. இளஞ்சேரன், சென்னை சி. வி. இராஜன், குடந்தை கே. கே. நீலமேகம், சென்னை சேஷாசலம் ஆகியோர், சிவகெங்கையில் நடைபெற்ற இராமநாதபுர மாவட்ட முதலாவது திராவிட முன்னேற்றக் கழக மாநாட்டில், மேற்கண்ட தீர்மானங்களைக் கொணர்ந்தும் வழிமொழிந்தும், விளக்கவுரையாற்றினர்.

தீர்மானங்கள் யாவும், ஏகமனதோடு நிறைவேறின.

—✲—

சென்னைமாநில திராவிட மாணவர் முன்னேற்றக் கழக முதல் மாநாடு

——✲✲——

திராவிடமாணவர்களின் நியாயமான உரிமைகளுக்குப் போராடுவது.

சமுதாயத்திலே நிலவும் சாதிபேதம்குருட்டு நம்பிக்கைகளை ஒழிப்பது.

முன்னேற்றமான கல்வித்திட்டத்துக்காகப் போராடுவது.

திராவிட கலாச்சாரம், மொழிகள் ஆகியவற்றின் மேம்பாட்டிற்கு உழைப்பது.

பகுத்தறிவு, விஞ்ஞானம் பரப்பி புதியதோர் சமுதாயத்தை உருவாக்குவது.

சமநீதி பெற்றுவாழ, தயங்காது உழைப்பது.

இத்தகைய குறிக்கோள்களைக் கொண்டுதான், திராவிட மாணவரியக்கம் தனதுபயணத்தை நடத்திவருகிறது. நாடும், நாமும் பூரிப்படையும் வகையில் திராவிட மாணவரியக்கம் வளர்ந்து வருகிறது. கல்லூரிகள், உயர்நிலைப்பள்ளிகள் உள்ள இடங்களிலெல்லாம் திராவிடமாணவர் முன்னேற்றக் கழகங்கள் மலர்ந்திருக்கின்றன. இவைகளையெல்லாம் திரட்டி, மத்திய அமைப்பு நிறுவப்படவேண்டும். வகுப்புநீதி—பறிக்கப்பட்டுள்ளதால் வந்தவிபத்து, கல்லூரிகளில் இடமில்லாது தத்தளிக்கும் நிலை, வர வர மோசமாகும் சூழ்நிலை ஆகியவைகளுக்குப் பரிகாரம் காணப்படவேண்டிய காலம் இது.

ஆகவே சென்னையில் இம்மாதம் 28 அல்லது 29ம் தேதியில் சென்னைமாநில திராவிட மாணவர் முன்னேற்றக்கழக முதல் மாநாடு நடத்த கருதப்பட்டுள்ளது. தமிழகத்தின் பல்வேறு கல்லூரிகளின் பிரதிநிதிகளும் பங்குகொள்கிறார்கள். இம்மாபெரும் மாநாட்டின் வரவேற்புக்குழு அமைக்கும் கூட்டம் **11—10—50** மாலை 6 மணிக்கு சென்னை தங்கசாலைத்தெரு 202, எண்ணுள்ளகழகக் காரியாலயத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள மாணவர்கள் இதனையே அழைப்பாகக்கொண்டு கலந்து கொள்ள அழைக்கிறேன். வரஇயலாத வெளியூர் நண்பர்கள், தங்களது ஆலோசனைகளை அனுப்பித் தருமாறு கோருகிறேன்.

"கார்னர் எஸ்டேட்ஸ்"
30/79, செம்புதாஸ்தெரு,
சென்னை 1.

K. A. மதியழகன், அமைப்பாளர்
சென்னைமாநில திராவிடமாணவர்
முன்னேற்றக்கழக மாநாடு, அலுவலகம்.

★

22-9-50 சென்னை காரன்ஸ்மித் மைதானத்தில் தோழர் S. V. லிங்கம் தலைமையில் நடைபெற்ற கண்டனக் கூட்டம். நடிப்புப் புலவர் K. R. ராமசாமி பேசுகிறார்.

★

கழகச் செய்திகள்

—×—

தொழுவந்தாங்கல் (கள்ளக்குறிச்சி)

25—8—50ல் காலை 6-30 மணிக்கு இவ்வூர் திரௌபதியம்மன்கோவிலடியில் ஆர். இராமசாமி தலைமையில் தி. மு. க. துவக்கவிழாகூட்டம் நடந்தது. அர்ச்சுனன் திராவிடப்பண் பாடினார். அன்பரசு கழகக்கொடியை ஏற்றிவைத்தார். கேசவன் விழாச் சொற்பொழிவாற்றினார். குப்பு நன்றி கூறினார்.

குளித்தலை

25—8—50ல் தி. வீ. முத்துகிருட்டிணன் தலைமையில் தி. மு. க. சார்பில் நடந்த பொதுக் கூட்டத்தில் ஈ. வி. கே. சம்பத், இரா. நெடுஞ்செழியன் ஆகியோர் பேசினர்.

மன்னார்குடி

19—8—50 திராவிட மாணவ முன்னேற்றக் கழகத் துவக்கு விழாப் பொதுக்கூட்டத்திற்கு எல். தங்கராசன் தலைமை தாங்கினார். இரா. நெடுஞ்செழியன் விழாச் சொற்பொழிவு நிகழ்த்தினார். எம். கே. ராதா நன்றி கூறினார்.

சின்னமனூர்

21—8—50 இரவு கே. வி. இராமசாமி கடையில் கே. ராசு தலைமையில் சின்னமனூர். எஸ். கருங்காட்டாங்குளம் தி. மு. க. உறுப்பினர் கூட்டம் நடந்தது. 18—8—50-ல் நடந்த பொதுக்கூட்ட வரவு செலவு கணக்கு பரிசீலிக்கப்பட்டது. பிறகு புதிய நிர்வாக உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். செயலாளர்:- ஆ. சுப்பிரமணியம், துணைச்செயலாளர்:- மூ. கிருட்டினன், நிதி உறுப்பினர்:- அ. முத்துக்கனி மற்றும் ஏழு செயற்குழு உறுப்பினர்கள் தெரிந்தெடுக்கப் பட்டனர்.

சீவில்லிபுத்தூர்

25—8—50-ல் 7-30 மணிக்கு, இவ்வூர் ஊருணிப்பட்டித் தெருவில் அருப்புக்கோட்டை பெரியசாமி தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில், எம். எஸ். இராமசாமி பேசினார்.

நண்பர்களுக்கு ஓர் நாடக விருந்து
14—10—50 சனி இரவு 9-30 மணிக்கு
சென்னை ஒற்றவாடை தியேட்டரில்
சி. என். அண்ணாதுரை தலைமையில்
வேலைக்காரி, நல்லதம்பி, வாழ்க்கை முதலிய படங்களில் பின்னணி பாடி புகழ்பெற்ற
இசைத்தென்றல் **எம். எம். மாரியப்பா,** அவரது குழுவினரின்
★ **" வி ரோ தி "** ★
என்னும் சமூக நாடகமும், இத்துடன் சினிமா நட்சத்திரம்
சி. டி. ராஜகாந்தம் குழுவினரின்
"வினோத சாமிகள்" காமிக்கும் நடைபெறும்.
கட்டணம் ரூபாய் 5, 3, 2, 1. (வரி உள்பட)
10—10—50 முதல் கீழ்க்கண்ட இடங்களில் டிக்கட் விற்கப்படும்
கா. அப்பாதுரையார், 10, அருணாசல ஆச்சாரி தெரு, வேப்பாக்கம் (பாரகன் டாகீஸ் அருகில்)
கே. எம். கண்ணபிரான், "கலவாய் வீடு" சோலையப்பன் தெரு வண்ணை.
எ. கே. சாமி, ஆர்டிஸ்ட், 71, ஸ்டிரான்ஸ் ரோட், வேப்பேரி.
(Ad) டாக்டர். கி. கணேசன், தி. மு. க. 202, தங்கசாலைத்தெரு (சுமைதாங்கி அருகில்)

சட்டக் கல்லூரியில்

சட்டக் கல்லூரி தமிழ்க் கழகத்தின் சார்பில் 4-10-50 மாலை கட்டபொம்மு நாள் தோழர் P. R. கோகுலகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது. தோழர் K A. மதியழகன் சொற்பொழிவாற்றினார்.

1-ம் பக்கத் தொடர்ச்சி

144 என்ன கதியாகும்? துள்ளிடும் புயல்களாம் எங்களுக்கு அது ஒரு சாதாரண தூசிதானே!" தொடர்ந்து மேலும் பேசுகையில் சிவகெங்கை மாநாட்டுத் தலைவர் தோழர் என். வி. நடராசன், காங்கிரஸ் சர்க்காரின் நிர்வாக ஊழல்களை, புள்ளி விவரத்தோடு எடுத்து விளக்கினார். மத்திய சர்க்கார், சென்னை மாகாணத்தை, மாற்றாந்தாய் மனப்போக்குடன் நடத்துவதாக, ஆதாரங்களோடு எடுத்துச் சொன்னார். அவரது பேச்சில்—நாட்டின் வேதனைகள் எல்லாம் புயல் உருக்கொண்டது போலிருந்தன. வெடித்த எரிமலையென, ஆவேசம் அவரது வார்த்தைகளில் உருக்கொண்டிருந்தன. நாட்டின் பசிக் கொடுமையைப் போக்க வையலாகாத இந்த சர்க்கார் அதை எடுத்துச் செல்பவர்கள் மீது ஏன் பாயவேண்டும் என்று கேட்டார்.

மேலும் ஆவேசத்தோடு பேசுகையில், இப்போது நம் முன் உள்ள பிரச்சினை வாழ்வதா, சாவதா என்பதுதான். நமது மக்கள் மானமுள்ளவர்களாக வாழவேண்டுமென்று விரும்பினால், அதைத் தடுத்து நிறுத்த சுயநலக்காரர்கள், அடக்குமுறைகளால் நம்மை வீழ்த்த நினைக்கின்றனர். அடக்குமுறையால் எந்த அரசாங்கமும் வாழ்ந்ததில்லை! பாசிச வெறியர்களின் வாழ்வின் முடிவு எவ்வளவு கோரமாக இருந்தது என்பதை நம் வாழ்நாளிலேயே கண்டுவிட்டோம். கொடுங்கோலாட்சி நிலைக்காது என்பதை ஜாரின் வீழ்ச்சியும், பிரெஞ்சுப் புரட்சியும் தெளிவாக்கிவிட்டன, இதை, அடக்குமுறைப் பாதையில் உருண்டோடிச் செல்லும் இந்த ஆளவந்தாருடைய கவனத்துக்குக் கொண்டு வருகிறேன்.

காங்கிரஸ் ராஜ்யம் இன்று, ஏழைகளின் கண்ணீரைத் துடைக்கப் பாடுபடவில்லை! பஜாஜ், டாடா, டால்மியா கும்பலின் கூடாரமாகிவிட்டது! பண முதலைகள், இந்த சர்க்காரை ஆட்டிப் படைக்கின்றனர். அதிகாரிகளையெல்லாம், மிரட்டி வாழ்கின்றனர். அரசாங்க அதிகாரிகளின் அன்றாட அலுவல்களிலெல்லாம் தலையிடுகின்றனர். பொறுப்போடு, கண்ணியத்தோடு, நாட்டை நிர்வகிக்கவேண்டிய அதிகாரிகளை இந்த காங்கிரஸ் எம். எல். ஏக்களும், காங்கிரஸ் பணக்காரர்களும் படுத்திவைக்கும்பாடு கொஞ்சநஞ்சமில்லை! போலீசுக்கு இவர்களாட்சியில் வேலை அதிகரித்ததுவிட்டது—'இங்கே ஓடு! அவனைப்பிடி!!' என்று ஆளுக்கொரு உத்தரவிடத் துவங்கிவிட்டனர். இது போன்ற கேவலமான ஆட்சிக்காகவா, பகவத்சிங் தூக்கில் தொங்கியது! குமரன் தெருவீதியில் பிணமானது! கப்பலோட்டிய வ. உ.சி. செக்கிழுத்தது. மாஜிகாங்கிரஸ்காரன் என்ற முறையில் சொல்கிறேன், இவர்கள் தியாகமெல்லாம்வீணாகிவிட்டது. அதிகாரபோதைக்கு இரையாகிவிட்டது. இறந்துபோன மாவீரர்களின் கல்லறைகூட கண்ணீர் வடிக்கும், துயரத்தால்! தொழிலாளர்கள் நிலை, மிக மிகக்கேவலமாகிவிட்டது. எது கேட்டாலும் சுட்டுத்தள்ளுகின்றனர். பம்பாயிலே, பலநாட்களாக ஆலைத்தொழிலாளர் உரிமைக் கிளர்ச்சி நடைபெற்று வருகிறது. அதை அடக்க பம்பாய் மந்திரி துப்பாக்கியால் முனைகிறார். அதுகண்டு, சகிக்காது இந்தியப் பிரதமர் நேருபோய் தலையிட்டால் 'இதில் தலையிடுவது சரியல்ல' என்று மாகாண போலீஸ் மந்திரி, மிரட்டுகிறார். ஆள்வது காங்கிரஸ்காரர் — ஆயினும் அவர்களுக்குள்ளே முரண்பாடுகள். இந்த ஆட்சியின் கேவலத்தைப்பற்றி சொல்லச் சொல்ல விரியும். சுருங்காது!" என்று முழக்கமிட்டார். மேலும் தொடர்ந்து பேசுகையில், திராவிடநாடு திராவிடருக்கே என்பதன் பொருள் குறித்து விவரித்தார். பொருளாதாரத்துறையிலும், அதிகாரத்துறையிலும் வடநாடு நம்மை எந்த அளவுக்கு ஆட்டிப்படைக்கிறது என்று விளக்கிய தோழர் என். வி. என். சென்னை சர்க்காரை மத்திய ஆட்சி எவ்வளவு கேவலமாக நடத்துகிறது என்பதை ஆதாரங்களோடு வெளியிட்டார், "அத்தகைய மத்திய ஆட்சிக்கு நாம் ஏன் பயந்து வரிப் பணங்களைக் கொடுக்கவேண்டும்? இணைந்து வாழ்வதால் ஒரு இலாபமும் இல்லை, மாறாக துன்பத்தின்மேல் துன்பம் தொடரும்போது அவைகளை நாம் சுமந்துகொண்டே இருப்பானேன்!

புதுஉலகம் காண்பது நமது இலட்சியம். சாதிபேதமற்ற ஒரு புதுசமுதாயம் நிர்மாணிக்கப்படவேண்டுமென்பது நமது ஆசை. நாம் மேற்கொண்டிருக்கும் பணி எத்தகையது என்பதும், அதற்காக நாம் ஆற்றவேண்டிய பணி எவ்வளவு பெரியது என்பதும், நமக்குத் தெரியும். ஆகவே தான் சில்லறைகளில் சிந்தனையைச் செலுத்த, நாம் விரும்புவதுமில்லை — நேரமுமில்லை! இது அறியாத, பலர், நம்மை வகுப்புவாதிகள் என்று அழைக்கின்றனர். இந்தத்துரதிர்ஷ்ட நாட்டில் பசுவைப்பார்த்து புலியென அழைக்கின்றனர்! நாம், பார்ப்பனர் — பார்ப்பனரல்லாதார் பிரிவு நீடிக்கவேண்டுமென விரும்புபவர்களல்ல. ஏமாறுபவனும்—ஏமாந்தவனும், சமுதாயத்தில் இருக்கும் நிலை ஒழிக்கப்படவேண்டும் என்பதுதான் நமது குறிக்கோள். அண்மையில் தோழர் பாஷ்யம் ஒரு அறிக்கை விட்டிருக்கிறார், "பார்ப்பனர்—பார்ப்பனரல்லாதார் பிரச்சினை நீடிப்பதுசரியல்ல இருவகுப்பைச்சார்ந்த தலைவர்களும் கூடிக்கலந்து பேசவேண்டும்" என்பதாக. உள்ளபடியே, பதுங்கி இருந்து இரை தேடும் சிறுநரி போலின்றி, பசுவோடு பசுவாக உலவ வரும் பார்ப்பன நண்பர்களை நாங்கள் வெறுப்பதில்லையே! எங்கள் இலட்சிய ஈடேற்றத்திற்கு-சாதிபேதம் எனும் சூதுப் பாதையைவிட்டு வரும் எல்லோரையும் இருகை நீட்டி வரவேற்கிறோம்!

இது குறித்து ஒரு முறையல்ல, இருமுறையல்ல, எத்தனையோ தடவைகள் எங்கள் பொதுச் செயலாளர் அண்ணா அறைகூவல்விட்டிருக்கிறார். வேண்டுகோள் விடுத்திருக்கிறார். அதை இருட்டடிப்பு செய்து, இனத்துவேஷத்தை மூட்டிவிடுவது பார்ப்பனப் பத்திரிகைகள்தான்!

நான், உண்மையாகவே தென்னாட்டு பார்ப்பன இளைஞர்களை எச்சரிக்கிறேன். உங்கள எதிர்காலத்தை, புத்திசாலித்தனம் என்றெண்ணி, புதை குழிக்கு இழுத்துச் செல்கிறார்கள் — இப்போதிருக்கும் பார்ப்பனத்தலைவர்கள்! அவர்களது பிரச்சாரப்பீரங்கிகளான பத்திரிகைகள்!!

வேடிக்கைக்கு நான் சொல்லவில்லை. முக்கியமான விஷயம்இது. கவனிக்கத் தவறிவிடாதீர்கள்!" என்று, அறிவுரை தந்த தோழர் என். வி. என். கோவில்பட்டித் தீர்மானங்களைக் கவனித்து அவைகளை அமுலாக்குவதில் துடிக்கவேண்டும், அண்ணா தரும் அறிவுரைகளைத்தாங்கி, நமது தியாகம் எத்தகையது என்பதைக் காட்டவேண்டும், நமது கழகத்தைப் பலப்படுத்தி, எதிர்காலம் நோக்கி வேகமாக விரையவேண்டும் என்று எல்லோரையும் அழைத்தார்.

ஈரோடு

வரவேற்புக் கூட்டம்

23—10—50

பொதுச்செயலாளர்

அண்ணாதுரை

கலந்துகொள்வார்.

ஈ. வெ. கி. சம்பத் பேசுவார்.

காஞ்சியில் குதூகலம்

சிறை சென்ற சி. என். ஏ.வுக்கு வரவேற்பு

'ஆரியமாயை' வழக்கில் ஆறுமாத சிறை தண்டனைபெற்று, சிறை புகுந்த பொதுச் செயலாளர் சி. என். ஏ. சர்க்காரின் விசேஷ அதிகாரத்தினால் விடுதலை செய்யப்பட்டார் என்ற செய்தி 28—9—50 அன்று காலையில் கிடைத்தவுடனேயே காஞ்சி மக்கள் குதூகலித்தனர். உடனேயே, காஞ்சி திராவிட மறுமலர்ச்சி மன்றத்தார் துண்டு வெளியீடுகள் மூலம் நகர் முழுவதும் செய்தியைப் பரப்பினர்.

அண்ணாத்துரை அவர்கள் 5—10—50 அன்று காஞ்சி வருகிறார் என்ற விபரம் கிடைத்தவுடன், அவரை வரவேற்க வேண்டுமென்று தீர்மானித்து, தோழர்கள் சிறப்பான ஏற்பாடுகள் செய்திருந்தனர்.

5—10—50-காலையிலிருந்தே காஞ்சிபுரத்தைச் சுற்றியுள்ள பல பகுதிகளிலிருந்தும் ஏராளமான மக்கள் குழுமியிருந்தனர். அரக்கோணம், திருவத்திபுரம், ஆர்காடு, திருமால்பூர், செங்கல்பட்டு, ஓர்காட்டுப்பேட்டை, உத்திரமேரூர், மானுமதி, வாலாஜாபேட், வேலூர், வாலாஜாபாத், நாராயணவரம், புத்தூர், திருத்தணி, தக்கோலம், நெம்பிலி போன்ற பல ஊர்களிலிருந்து இயக்கத் தோழர்கள் ஏராளமாகக் கூடியவண்ணமிருந்தனர்.

மாலை 5—மணிக்கெல்லாம், புகைவண்டி நிலையத்தில் ஆயிரக்கணக்கில், கொடிகளுடன், வருகையை எதிர்பார்த்து மக்கள் கூடியிருந்தனர்.

செங்கற்பட்டிலிருந்தே நடிப்புப் புலவர் கே. ஆர். இராமசாமி, திருச்சி சாம்பு ஆகியோருடன் காரில் வந்த சி. என். ஏ. காரை விட்டிறங்கியதும் ஏராளமாக மாலைகளை அணிவித்து 'அண்ணா வாழ்க' 'அடக்குமுறை ஒழிக' என்று முழக்கிய வண்ணம், கூட்டம் நடக்கவிருந்த ஆடிசன் பேட்டையை நோக்கி நடந்தனர்.

மாலை 6-30மணிக்கு ஆடிசன்பேட்டையில் வரவேற்புக்கூட்டம் தொடங்கியது.

பல கழகங்கள் சார்பாகவும், தனிப்பட்டவர்கள் சார்பாகவும் நூற்றுக்கணக்கில் மாலைகளணிவித்தனர். தி. மு. க. சார்பில் வரவேற்பு மடலை சி. வி. எம். அண்ணாமலையும், பகுத்தறிவு மன்ற சார்பில் தந்த வரவேற்புரையை வெ. சம்பந்தமும் வாசித்தளித்தனர். சி. வி. எம். அண்ணாமலை கூட்டத்திற்கு செ. கோ. பெருமாள் தலைமை வகிக்கக் கேட்டுக் கொண்டார். செ. கோ. பெருமாள் தலைமைவகித்து சிறிது நேரம் உணர்ச்சி ததும்பப் பேசினார்.

அடுத்து, சென்னை மாவட்டக் கழகச் செயலாளர் கே. கோவிந்தசாமி, தி. மு. மா. க. செயலாளர் கே. ஏ. மதியழகன் பி. ஏ., காஞ்சி. கல்யாணசுந்தரம், நடிப்புப் புலவர் கே. ஆர். இராமசாமி ஆகியோர் சிறை சென்று மீண்ட சி. என். ஏ. வைப் பாராட்டிப் பேசினர்.

இறுதியாக, அண்ணாதுரை தனக்கு அளித்த வரவேற்பிற்கு நன்றி தெரிவித்தும், தி. மு. க. எதிர்கால திட்டங்கள் குறித்தும் விரிவுரையாற்றினார்.

தலைவர் முடிவுரைக்குப்பின், சபாபதி நன்றி கூற கூட்டம் இனிது நிறைவேறிற்று.

நாஞ்சில் நாட்டுச் செய்திகள்

13-10-50 மாலை 7 மணிக்கு நகர திராவிட முன்னேற்றக் கழக அலுவலகத்தில் பொதுக்குழு உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும். அவ்வமயம் பல பொருள்பற்றி ஆலோசித்து முடிவுசெய்ய வேண்டியிருப்பதால், எல்லா உறுப்பினர்களையும் தவறாது கலந்துகொள்ள வேண்டுகிறேன் என என், குற்றாலலிங்கம் அறிவிக்கிறார்.

20-10-50 வெள்ளி மாலை 7 மணிக்கு நாகர்கோவில் ந. தி. மு. க. அலுவலகத்தில், நாஞ்சில் மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக அமைப்புக் கூட்டமும், மாநாட்டு வரவேற்புக் கமிட்டியும் அமைக்கவேண்டியிருப்பதால், நாஞ்சில் மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு கிளைக் கழகமும் இரண்டு பிரதிநிதிகள் வீதம் தேர்ந்தெடுத்து, அவர்களின் பெயரை என்னுடைய முகவரிக்கு அனுப்பும்படி வேண்டிக்கொள்கிறேன் என நாஞ்சில் வட்ட தி. மு. க. அமைப்பாளர், வி. எம். ஜான் அறிவிக்கிறார்.

பிறப்பு

சென்னை பத்மநாபன்—கனகா ஆகியோருக்கு 11—9—50ல் ஆண்மகவு பிறந்தது தாயும், சேயும் நலம்.

பணகுடி அண்ணா பகுத்தறிவு மன்றச் செயலாளர் வி. வன்னியன்—சிவகாமியம்மை தம்பதிகளுக்கு 18—9—50ல் ஆண் குழவி பிறந்து தாயும் சேயும் நலம்.

மதுரை பொன்னையா — வள்ளியம்மை தம்பதிகளுக்கு 9—9—50 பெண் மகவு பிறந்து தாயும், சேயும் நலம்.

சென்ற ஆண்டு, புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் தலைமையில் விதவைத் திருமணம் புரிந்து கொண்டவரும், நமது தலைமை நிலையத்தில் பொறுப்பாளராக இருந்து காரியமாற்றி வருபவருமாகிய நா. இராசவேல் துணைவி சாரதாவிற்கு 10-9-50-ல் ஆண் மகவு பிறந்து, தாயும் சேயும் நலம்.

திருமணம்

திருவாரூரில் 7-9-50-ல் முத்துகிருட்டிணன் தலைமையில், கோபால கிருட்டிணன் — சந்திரோதயம் திருமணம் நடந்தது. இராதாமணாளன் மற்றும் பலரும் பேசினர்.

காங்கிரஸ் ராஜ்யம்-குரங்கு கைபூமாலை!

சிதைந்தோம்! சீரழிந்தோம்! வாழ்விழந்தோம்!!

எதிர்காலம் நமது—எண்ணி, பணிபுரிவோம்.

பார்ப்பன மாந்தரே, பகையுணர்ச்சி வளர்க்காதீர்!

இன்பத் திராவிடமே எமது இலட்சியம்

உடுமலைத் தலைவர் கனகராசன் வீரஉரை.

சிவகங்கையில், பெருமிதத்தோடு நடைபெற்ற இராமநாதபுர மாவட்ட முதல் தி. மு. க. மாநாட்டைத் துவக்கிவைத்து உடுமலைப்பேட்டை முனிசிபல் சேர்மன் எம். எஸ். கனகராசன், அரியதொரு, வீரஉரை நிகழ்த்தினர். நாட்டு நிலை, நமது கடமை ஆகியவைகள் குறித்த அவரது, வீரக் குரல், துடிக்கும் இளைஞர்களுக்கோர் சொல் விருந்து. அதன், முக்கிய பகுதிகள், தரப்பட்டுள்ளன:—

"திராவிடம்" என்பது "தமிழகம்" என்பதிலிருந்து மாறிவந்த சொல் என்பது பல மொழியாராய்ச்சியாளர்களின் கருத்தாகும். திராவிட மொழிகள் என்பது தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், துளுவம் முதலியனவாகும். இம்மொழிகளைத் தங்களுக்குரிய மொழியாகக் கொண்டவர்கள் அனைவரும் திராவிட மக்கள்; அதாவது தமிழ் சார்புடைய மக்கள் என்பதாகும். இவர்கள் பொதுவாக தென்னிந்திய மக்கள் என்று கூறலாம். இம்மக்களுடைய நிறம், மொழி, உணவு, உடை, பண்பு முதலியவைகளில் ஒற்றுமை காணப்படுகின்றது. இப்படியுள்ள மக்கள் தங்கள் நாட்டை தாங்களே தங்கள் நன்மைக்கும், பண்புக்கும் ஏற்ப தனிநாடாகப் பிரித்து ஆட்சி செய்து வாழவேண்டும் என்னும், இயற்கையாக ஏற்பட்ட, நியாயமானது என்று உலகம் ஒப்புக்கொண்ட நோக்கத்தை அடிப்படையாகக் கொண்ட இயக்கமே திராவிடப் பெருங்குடி மக்களின் இயக்கமாகும்.

நாம் காரணம் கூறுமலேகூட நம்நாடு தனிநாடு ஆகவேண்டும் என்று கேட்பது உரிமையும், நியாயமும் ஆகும். ஒவ்வொரு வர்க்கத்தாரும் (Nationality) ஒவ்வொரு வட்டாரம் அமைத்துக் கொள்வது ஏற்கனவே உலகம் ஒப்புக் கொள்ளப்பட்ட நீதி, ஆனால் நாம் அந்தக் காரணத்திற்காக தனிநாடு கேட்கவில்லை. திராவிடநாடு தனிநாடாகாமல் நம் மக்கள் சீராக வாழ முடியாது என்கிற அவசியம் ஏற்பட்டதின் காரணமாகக் கேட்கிறோம். இந்திய யூனியனில் நாம்சேர்ந்துள்ளவரை நம் மொழி சீரழியும் என்பதும், நமது பண்பு பாழாகும் என்பதும், நமது செல்வம் சிதறடிக்கப்படும் என்பதும், நமது வாழ்வு தாழ்வாகும் என்பதையும் கண்கூடாகக் கண்டுவிட்டோம். சிந்தனை செய்யாதவர்களுக்கு தெரியாமலிருப்பது, நம் குற்றம் அல்ல. ஆனாலும் விளக்கவேண்டிய பொறுப்பு நமக்கு இருக்கிறது.

உணவுப் பிரச்சினை ஒன்றே போதுமானது. நாம் மத்திய சர்க்காரோடு சேர்ந்திருந்தால் நமக்கு வேண்டிய உணவுப் பொருள்களை வெளிநாடுகளிலிருந்து காலா காலத்தில் கொண்டுவர முடியாது. நம் மக்களை பசிக்கும், பட்டினிக்கும் பலியாக்கிவிட்டோம். இதற்கு விளக்கம் வேண்டியதில்லை. நாம் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். நாம் வரிப்பணங்களை மத்திய சர்க்காருக்கு அள்ளிக் கொடுத்துவிட்டு, பிறகு, பிச்சை கேட்க இருகைகளை ஏந்திக்கொண்டு வடநாட்டுக்கு ஓடுவானேன்! இந்த நாட்டுக்காரியங்களில் எப்படி அவர்களுக்கு அக்கரை இருக்கும்? வடநாட்டுத் தலைவர்களை வணங்கும் மூட மக்களாக வைத்திருப்பதும், பொருள் சுரண்ட தென்னாட்டை சந்தையாக வைத்திருப்பதும்தான் அவர்கள் நோக்கம். நாம் சுதந்திரத்தில் எதனைக் கண்டோம். 'இங்கிலீஷ்' போய் அந்த இடத்தில் "இந்தி' வந்தது. ஆங்கிலேய கவர்னர்கள்போய் வடக்கத்தியர் கவர்னர்களாகவந்தனர். இதைச் சொன்னால், சில காங்கிரஸ்காரர்கள்-திரு. சண்முகம் அவர்களுக்கும், திரு. ராஜாஜி அவர்களுக்கும், திரு. மத்தாய் அவர்களுக்கும் பதவி கிடைத்ததைப் பற்றிப் பேசுவார்கள். அந்தப் பதவி வடநாட்டாரிட்ட பிச்சை -கிரி இருந்தது, இருக்கிறதே யொழிய, அதில் உரிமை இருந்த மாதிரியில் இல்லை. வேண்டும்போது கூப்பிடவும், வேண்டாதபோது விரட்டி விடவுமாகத்தான் இருந்தது என்பதை மறந்து விடாதீர்கள். பலமான மத்திய சர்க்கார் வேண்டும் என்ற கொள்கையால் மாகாணங்களின் உரிமைகள் பலியிடப்பட்டு விட்டன. மாகாண சுயநிர்ணய உரிமையை ஒப்புக்கொண்டிருந்த காங்கிரஸ் தலைவர்கள், சுதந்திரம் வந்ததும் கொள்கையை மாற்றிக் கொண்டார்கள்.

தென்னாட்டவர் உழைப்பது, வடநாட்டவர் ஊதியம் பெறுவது. தென்னாட்டாருக்கு ஆறு அவுன்ஸ் ரேஷன், வடநாட்டாருக்கு பதினாறு அவுன்ஸ் ரேஷன். உழைப்பது இங்கே, ஊதியம் பெறுவது அங்கே! பாடுபடுவது இங்கே, பலன் பெறுவது அங்கே! இதை நினைத்தால் "மரம் இங்கே! மலர் அங்கே!" என்ற சினிமாப்பாட்டு நினைவிற்கு வருகிறது. வடநாட்டில் அதிகமாக உற்பத்தியாகக்கூடிய துணி, சர்க்கரை இவைகளின் தற்போதைய கண்ட்ரோல் விலை பழைய கள்ள மார்க்கெட் விலையை விட அதிகமாயிருக்கிறதே! மில் வேஷ்டி விலையைப் பாருங்கள். இது மத்திய சர்க்காருக்கு அதிக அதிகாரத்தை கொடுத்ததின் விளைவுகள். மத்திய அரசாங்கத்தில் வடநாட்டுக்காரர்களுக்குத் தனிச் சலுகைகள். சக்கைகள் தான் நம் வியாபாரிகளுக்கு இங்கே. மத்திய கவர்மெண்ட் கிராண்டுகள், சுளுவாக வடமாகாணங்களுக்கு! நாம் பறந்து கேட்டாலும் கிடைப்பதில்லை. வடக்கத்திய மாகாணத்தில் ஒரு கோடி எட்டுலட்சம் அதிக விலை கொடுத்து அரிசி வாங்க வேண்டியிருக்கிறது. இவைகளுக்குக்கேள்விமுறையில்லை. வடநாட்டின் கையில் ஆட்சி கிடைத்து விட்டது! பொதுவாக "மதராசி" என்றாலே வடநாட்டானுக்கு ஒரு அலட்சியம். காறி உமிழ்கிற மாதிரி ஒரு மரியாதை இல்லாத உணர்ச்சி-நாம் சுயமரியாதை இல்லாதவர்களாக இவ்வளவு கஷ்டங்களுக்கு இடையில், நம் மொழி, கலை, பொருள், வாழ்வு முதலியன குன்ற, ஏன் அவர்களுடன் இணைந்து வாழவேண்டும்? நாம் தனித்து வாழ நமக்கு கடல்வளம், மலைவளம், நிலவளம், கனிவளம் முதலியன சகலமும் இருக்க, நாம் ஏன் அவர்களுக்குக் கைகட்டி வாழவேண்டும்? இதை முதலில் காங்கிரஸ் தோழர்கள் நன்றாக சிந்திக்க வேண்டும்.

இந்தியா ஒரே நாடாக இருந்தால் உலகம் மதிக்கும் என்றும், தற்காப்புக்கு ஒரே யூனியனில் இருப்பது அவசியம் என்றும் சிலர் தவறுதலாக நினைக்கிறார்கள். இக்காலத்தில் எந்தப் பெரிய நாடும் தனித்து தன் சொந்த பலத்தில் வாழ்வதில்லை என்பது, ரஷ்யாவும், அமெரிக்காவும் மற்ற நாடுகளை தனக்கு நட்பு நாடுகளாக ஆக்கிக் கொள்வதில் எவ்வளவு அக்கரை காட்டுகின்றன என்பதிலிருந்து விளங்கும், மற்றும் நமக்கு அருகில உள்ள இலங்கைத் தீவை எடுத்துக்கொள்ளுங்கள். நம் நாட்டிற்கும் அதற்கும் இணைவைத்துப் பார்த்தால் ஒரு கோழி முட்டை மாதிரியுள்ள தீவு. எனினும் பெரிய நாடான இந்தியாவிலிருந்து செல்வோருக்கு எவ்வளவு கட்டுப்பாடுகள் செய்கிறார்கள். அங்கு போய் திரும்பி வருகிறவர்களை வழியில் எப்படி சோதித்து அனுப்புகிறார்கள். பெரிய நாட்டுக்காரர்களாகிய நாம் என்ன செய்ய முடிகிறது? ஏன்? பெரியநாடு சின்னநாடு என்பது பிரச்சினையல்ல. ஒரு நாடு இனியொரு நாட்டைத் தாக்கினால் அதற்கு வேண்டிய நாடுகள் அனைத்துடனும் யுத்தம் செய்யவேண்டும். பிறகு உலக மாயுத்தமாக அது மாறும். எந்த நாடும் தன் சொந்த பலத்தில் இனி தனித்து வாழமுடியாது. மற்ற நாடுகளோடு ஒப்பந்தம் செய்துகொண்டுதான் வாழமுடியுமாதலால் பாதுகாப்புக்காக ஒன்றாக இருக்கவேண்டும் என்ற காலம் இது அல்ல, அப்படி அவசியம் இருந்தால், திராவிடம் தனியாகப் புரிந்து பின் பாதுகாப்பு விஷயத்தில் ஒப்பந்தம் செய்து கொள்ளலாம். யூனியனுடன் சேர்ந்து இருக்க வேண்டும் என்பதற்கு எந்த அவசியமும் இல்லை. பிரிந்து தனிநாடாக செய்துகொள்ள வேண்டும் என்பதற்கு அத்தியாவசியங்கள் பல இருக்கின்றன. பிரியாமல் வாழவே முடியாது என்பதற்கு பலநிர்ப்பந்தங்கள் இருக்கின்றன என்பதை முதலிலேயே விளக்கியுள்ளேன். ஆகவே நம் திராவிடத்தைத் தனிநாடாக ஆக்கிக் கொள்வது நமது இலட்சியம்.

நமது இலட்சியத்தை அடைய நாம் சரியான முறையிலே திட்டம் தீட்டவேண்டும் தென்னாட்டார் அனைவரையும் ஒருமுகப் படுத்து முறையில் நமது திட்டம் அமையவேண்டும். நாம் ஒரு பலமான ஐக்கிய முன்னணி ஏற்படுத்தவேண்டும் பொருளாதார அமைப்பில் பல திறப்பட்ட அபிப்பிராயங்கள் இருக்கலாம். அவைகள் அவரவர்களுடைய சொந்த அபிப்பிராயங்களாக இருக்க வேண்டுமே யொழிய, இயக்கக் கொள்கையாகச் செய்துவிடக்கூடாது. அதனால் ஐக்கிய முன்னணி ஏற்படுத்துவதில் தடையும் தாமதமும் ஏற்பட்டு நமது இலட்சியம் நிறைவேறுவதில் சங்கடங்கள் ஏற்படலாம். அவ்விஷயத்தைத் தனிநாடு பிரிந்த உடன் அந்தக் காலத்து மக்கள் அபிப்பிராயத்திற்கு விட்டுவிடுவது நல்லது. அதுவரை தனிநாடு பிரிவுக்கும், மக்கள் அறியாமைப் போக்குவதற்கும் நமது சக்திகளைப் பிரயோகித்து அறிவுள்ள மக்கள் கொண்ட சமூகமாக ஆக்க முயற்சிப்போம்.

ஏழை, மத்தியதரத்தார், பணக்காரர், சகல சாதிமத மக்கள் அனைவரும் ஆதரிக்கும்முறையில் இருக்கவேண்டும். ஏன், பார்ப்பனர், அல்லாதார் பிரச்சினையைக் கூட இல்லாதபடி செய்துவிடலாம். ஏனெனில் பார்ப்பனர்களும், இப்பொழுதுகொஞ்சம், கொஞ்சமாக உணர்ந்து வருகிறார்கள். சில வைதிகர்கள் தவிர, வாலிபர்கள் திருந்தி சமத்துவ மனப்பான்மையில் வந்துகொண்டிருப்பதுவரவேற்கத்தக்கது. சுமார் ஆயிரவருடங்களுக்கு மேலாக இத்தமிழ்நாட்டின் உப்பைத்தின்றுவிட்டு இந்நாட்டைக்காட்டிக்கொடுக்கும் வகையில் நடந்துகொள்ளாமல் இருப்பதே அவர்களுக்கு இனிமேல் ஒரு பாதுகாப்பாகும். தமிழன் விழித்துக்கொண்ட இந்நாளில் பார்ப்பனர்கள் வடநாட்டுக்குகங்காணிகளாக இருந்து இனி இந்நாட்டைக் காட்டிக் கொடுத்து, ஐந்தாம் படைகளாக வாழநினைத்தால் அதன் விளைவு பயங்கரமானதாக இருக்கும் என்பதை, அவர்கள் நன்மையை உத்தேசித்து எச்சரித்து எடுத்துக்காட்டுகிறேன்.

காங்கிரஸ் சர்க்கார் மக்களிடத்திலும்,மக்கள் உரிமைகள் விஷயங்களிலும் எவ்வாறு நடந்து கொள்கிறது என்பதை நான் விரிவாக சொல்லத் தேவையில்லை. அதிகார போதையில் மற்றக்கட்சிக்காரர்களின் உரிமைகளைப்பற்றியும், ஜனநாயக நெறியினைப்பற்றியும் கவலையே கொள்வதில்லை. சர்க்காரின் குறை, குற்றங்களை எடுத்துச்சொல்வது, எதிர்க்கட்சியாரின் உரிமைமாத்திரம் அல்ல, ஜனநாயக ரீதியில் பக்கங்களுக்குச் சேரவேண்டிய கடமையுமாகும். ஆனால் காங்கிரஸ் தலைவர்களும், மந்திரிகளும் அப்படி அவர்களுடைய தவறுகளை எடுத்து காட்டுபவர்களுக்கு ஒரே பதில் தான் வைத்திருக்கிறார்கள். "சர்க்காரைக் குறைகூறுபவர்களை நம்பாதீர்கள். அவர்கள் எல்லாம் விஷமிகள்" என்பதே அப்புனிதமான பதிலாகும். அண்ணா, பெரியார் போன்ற தலைவர்களை சிறைக்குள் தள்ளிவிட்டு ஹிட்லர் ஆட்சி நடத்துகிறார்கள்! மக்கள் உரிமைகளை அறியாத மரக்கட்டைகள்!

"இப்பொழுதுதான் சுதந்திரக் குழந்தைக்கு மூன்று ஆண்டாகிறது. கொஞ்சம் பொறுத்திருங்கள்"—என்று பேசுகிறார்கள். சுயராஜ்ய குழந்தை பிறந்ததிலிருந்து வருடத்துக்கு வருடம் நிலைமை மோசமாகிக்கொண்டேபோகிறதே! இந்தக் குழந்தையை இந்த இலட்சணத்தில் வளர்க்கிறார்கள் காங்கிரஸ்காரர்கள். இங்கிலாந்து நமக்குக்கொடுக்க வேண்டிய சுமார் ஆயிரங்கோடி ஸ்டர்லிங் கடனில் பகுதியைத் தீர்த்துவிட்டார்கள். ரிசர்வ் பாங்கிலிருந்த 500 கோடியில் 140 கோடிதான் பாக்கி

(12-ம் பக்கம் பார்க்க)

3-ம் பக்கத் தொடர்ச்சி

ரேறிக் குதித்திருந்தால் சுலபமாகச் சொல்லி யிருப்பேன். பேசாமல் இருந்தேன். மறுபடியும் கேட்டார்கள் "சர்க்காருக்கும் எனக்கும் சண்டை" என்றேன். அதிலே ஒரு கைதி சர்க்கார் பணத்தைக் கையாடி உள்ளே வந்தவன். நானும் அதே போல ஏதாவது செய்துவிட்டு வந்தேனு என்று கேட்டான். "இல்லை எதுவும் எடுத்து விட்டு அதற்காக வரவில்லை, ஒரு புத்தகம் எழுதினேன். அதற்காகச் சிறை" என்றேன். புத்தகம் எழுதினல் கூடவா இந்த சர்க்கார் பிடிக்கிறார்கள்? என்று ஆச்சரியப் பட்டார்கள். "எதுவும் சர்க்காரைத் திட்டியிருக்கிறீர்களா?" என்று கேட்டார்கள். "சர்க்காரைத் திட்டவில்லை. பார்ப்பனீயத்தைக் கண்டித்திருக்கிறேன். ஜாதி முறையைக் கண்டித்திருக்கிறேன்" என்றேன் உடனே ஒவ்வொருவரும், "ஐயோ, நாங்கள் படிக்கவில்லையே, படித்திருந்தால் நாங்களும் அதேமாதிரி புத்தகங்கள் எழுதுவோமே" என்று வருத்தப்படத் தொடங்கி விட்டார்கள்.

சர்க்கார் நாட்டில் நாங்கள் இருந்தால் வகுப்புத்துவேஷத்தைப் பரப்புகிறோம் என்று சிறையில் போடுகிறது ஆனால் எங்களை அனுப்புகின்ற இடத்திலும் மனிதர்கள் தானே இருக்கிறார்கள்!

நாங்கள் விடுதலை அடைந்ததற்கு மகிழ்ச்சி தெரிவித்தீர்கள். ஆனால் மகிழ்ச்சி அடைவதற்கு முன்னல் எப்படிப்பட்ட பாரம்பரையினர் சிறையில் வைக்கப் பட்டிருந்தனர் என்பதைச் சிந்திக்க வேண்டும். நாம் சேரன் செங்குட்டுவன் பரம்பரையினர். முன்காலத்தில் சேரன் செங்குட்டுவன் கங்கைக்கரையிலே கனக விசயர்களோடு போரிட்டு அவர்களைப் பிடித்து வந்து சிறையில் போட்டான் என்று சரித்திரம் கூறுகிறது. ஆனல் இப்போது செங்குட்டுவன் பரம்பரையினரை கனக விசயன் பரம்பரையினரைக் கண்டித்தோம் என்று குற்றம் சாட்டிச் சிறையில் வைத்தார்கள் வெட்கம், துக்கம்—வேதனை அடையக்கூடிய விஷயமல்லவா இது?

உண்மையிலேயே இதில் உங்களுக்கு வேதனை இருந்தால் அடுத்த மாதம் 25-ந் தேதி சென்னைக்கு மத்திய சர்க்கார் மந்திரி இராஜகோபாலாச்சாரியார் வருகிறார். கோவில்பட்டி தீர்மானப்படி அவருக்கு அனைவரும் கருப்புக் கொடி காட்டவேண்டும். ஆனல் சர்க்கார் என்னை வெளியே விட்டுவைத்திருக்க மாட்டார்கள்—உள்ளே தள்ளிவிடுவார்கள்—மறுபடியும் தங்களை வேஜூகளைப் படித்துக் குற்றமில்லை என்று கண்டு பிடித்து விடுதலை செய்தாலும் செய்வார்கள்! நான் வெளியே இருந்தாலும் உள்ளே அடைபட்டிருந்தாலும் தீவிரமாக ஆனல் சட்டத்துக்கு உட்பட்டு இந்தக் காரியங்களைச் செய்யவேண்டும்.

இது இடைக்கால விடுதலை—பரிபூரண விடுதலை அல்ல. எப்போது பரிபூரண விடுதலை? நம்முடைய இலட்சியமான இன்பத் திராவிடத்தைப் பெற்ற பிறகுதான் அப்போது, இப்போது நம்மை சிறையில் அடைத்தவர்கள் தயங்குவார்கள் நம்மோடு ஒன்று சேர. "தவறு செய்துவிட்டோமே" என்று தயங்குவார்கள். "பரவாயில்லை. சிறியோர் செய்த சிறு பிழையெல்லாம் பெரியோராயினும் பொறுப்பது கடனே" என்ற மூதுரைப்படி அவர்களையும் அணைத்துக் கொள்வோம்! அதுவரை "ஆலோலக் காட்சி போல, பறவைகளை விரட்டும் போது அவைகள் ஓடுவதும், பிறகு வந்து உட்கார்ந்து கொள்ளுவதைப்போல உள்ளே போவதும வெளியில் வருவதுமாகத்தான் இருக்கும்.

சிறைக்குப் போவதும் வெளியே வருவதும் இனி நம் கட்சியில் உள்ள அனைவருக்கும் சர்வசாதாரண நிகழ்ச்சிகளாக இருக்கவேண்டும். தியாகத் தழும்புகள் நம் இளைஞர்கள் இதயங்களிலும் உடலகளிலும் படியவேண்டும். சிறைக்குப் போனல் நமக்கு என்ன நஷ்டம். நமக்கு இலட்சியத்தில் பற்றும் நாணயமும் இருந்தால் கடுமையான தியாகங்களை எல்லாம் செய்யலாம். ஆண்டுக் கணக்கிலே சிறையிலே அடைபட, தூக்குமேடை ஏறவும் நீங்கள் தயாராக வேண்டும். திராவிடநாடு போராட்டம் தொடங்குவதற்கு முன்னல் படையில் சேர வரும் வாலிபர்களுக்கு உள்ள தகுதி எவ்வளவு தியாகத் தழும்புகள் ஏறியிருக்கிறது என்ற தகுதியைத்தான் பார்த்துச் சேர்க்கப்படுவார்கள். தியாகத் தழும்புகள் ஏறினலொழிய நம் இதயகீதத்தை இழந்திருக்கும் இன்பத்தை, நம் இலட்சியமான திராவிடத்தைப் பெற முடியாது.

மந்திரி பக்தவத்சலம் திருச்சிறைப்பள்ளியில் பேசும்போது குறிப்பிட்டாராம் "திராவிட நாடு அளவில் சிறியது. அதை வைத்துக் காப்பாற்ற முடியாது." என்று. அகில உலக ஏகசக்ரவர்த்தியாக இருக்க ஆசைப்படும் பக்தவத்சலம் இப்போது எதை ஆளுகிறார்? சென்னை மாகாணத்தைத் தானே! புளுகில் தெரியுமா பக்தவத்சலம் யார் என்று? லக்னௌவில் கேள்விப்பட்டிருப்பார்களா? அம்ருதசரஸில் உள்ளவர்கள் அறிவார்களா? இவர் திராவிடநாடு அளவில் சிறிது என்கிறார். பக்தவத்சலத்துக்கு ஓய்விருந்தால் சிந்திக்கும் சக்தியும் இருந்தால் பூகோளப் படத்தைப் பார்க்கட்டும். பிரான்ஸ் படத்தை ஒரு பக்கத்தில் மாட்டி அதற்குப் பக்கத்தில் திராவிட நாட்டுப் படத்தை மாட்டி ஒப்பிட்டுப் பார்க்கட்டும். அதைப்போல ஸ்பெய்ன். இட்டாலி, பெல்ஜியம், போர்ச்சுகல், ஸ்காண்டினேவியா இந்த நாட்டுப் படங்களோடு திராவிட நாட்டை ஒப்பிட்டுப் பார்க்கட்டும். இவைகள் எல்லாம் திராவிட நாட்டைவிட சிறியவை அல்லவா? இவைகள் எல்லாம் அழிந்தா போயின. அல்லது அமெரிக்கா அணுகுண்டைப் போட்டு இவைகளை எல்லாம் அழித்துவிட்டதா?

வடநாட்டை நம்பி நாம் எப்படி வாழ முடியும்? சரித்திரத்தைப் புரட்டினல் முதலில் அலெக்ஸாண்டர் பாஞ்சாலத்தில் படையெடுத்து பாஞ்சால மன்னர்களை வென்றான். அதற்குப் பிறகு கோரி படையெடுப்பு அதற்குப் பின்னல் கஜினி சோமநாதபுரத்தில் உள்ள சிலையைத் தகர்த்தெறிந்தான். செங்கிஸ்கான் வந்தபோது பாஞ்சாலம் பிணக்காடானது. அவர்களை எதிர்த்துப் போராட முடிந்ததா? என்ன ஆயின அக்னியாஸ்திரம், வருணாஸ்திரம், வாயுவாஸ்திரம் இவைகள் எல்லாம்? நீ சொல்லுகிறாய் இந்தியா ஒரு நாடு என்று! உன்னை நம்பி எப்படி வாழ்வது?

சிறு நாடு 'காஷ்மீர்' அதை ஒன்றும் செய்ய முடியவில்லை. முன்னல் பாக்கிஸ்தான் படை புகுந்துவிட்டது, அதுதான் காரணம் என்கிறாய். இந்தியப் படைத் தலைவர் பெயர் பல-தேவ்-சிங் பலம், தேவ சக்தி, சிங் என்ற பட்டம் இவை மூன்றும் என்ன செய்தது? காஷ்மீரைக் காப்பாற்ற முடியாத உன்னை நம்பி எப்படி வாழ முடியும்.

எனக்கு மாலை அணிவித்து மகிழ்ச்சி காட்டியவர்களுக்கும், நான் போனபிறகு கழக விஷயத்தில் அக்கரை காட்டி வேலை செய்தவர்களுக்கும் என் நன்றி. வெளியில் வந்துவிட்டேன்—இனி என் வேலை தொடரும்!"

✱

2-ம் பக்கத் தொடர்ச்சி

வந்து, மக்களின் அதிருப்தியைக் குறைத்துக் கொண்ட ஆளவந்தார், இனும் சட்டத்தை மறந்து விடுவது, வழக்கமாக வழுக்கிக்கொண்டிருக்கும் பண்பிற்கு பிரிதொரு எடுத்துக்காட்டாக அமைந்து, மக்களின் வெறுப்பைத் தேடித்தரும் என்பதை நினைப்பூட்ட விழைகிறேன்.

கடைசியாக,—எழுத்துரிமை பேச்சுரிமைகளை அழிக்கச் செய்யும் முயற்சி, தன்னையே அழித்துவிடும் என்பது, சரிதம் சொல்லும் செய்தி. ஒரு வகையிலே இந்த சர்க்காரை நாங்கள் பாராட்ட வேண்டியவர்களாய் இருக்கிறோம். 'ஆரியராவது, திராவிடராவது, எல்லாம் கற்பனை' என்று தீக்கோழித்தனம் செய்த காங்கிரஸின் சர்க்காரே, 153 A — I. P. C. ப்படி எங்கள் மீது வழக்குத் தொடுக்கிறதென்றால், இரு வேறு தனித் தனி இனங்கள் இருப்பதை, சட்டபூர்வமாக ஒப்புக்கொண்டு விட்டது என்பதைத் தவிர, அதற்கு வேறு பொருளில்லை. பேசிப் பேசி மறைத்து விடலாமென்று இதுவரை எண்ணியிருந்த காங்கிரஸ் ஆள்வார், உண்மையை உணர்ந்துகொண்டதற்காகப் பாராட்டுகிறோம். மற்றபடி, மக்களுக்குள்ளே பகைமையையோ, துவேஷத்தையோ உண்டுபண்ணுவதையே கருத்தாகக் கொண்டிருப்பவர்கள் நாங்களல்ல என்பதையும், மக்களைப் பிறப்பிலே பிரித்து, ஏற்றதாழ்வுகள் கற்பித்து, மதமென்ற மடத் திரையிட்டு மறைத்து, நாட்டை இடுகாடாக்கியிருக்கும் நிலையை மாற்றி, சமத்துவபுரியை செழுமையிலே சமைப்பதற்காக, செஞ்சாரப் பாடுபடுகிறவர்கள் நாங்கள் என்பதையும் மக்கள் மன்றத்தில் நிரூபித்தே தீருவோம்!

ஆம்பூர் பொதுக்கூட்டம்

14—10—50 சனி மாலை

மு. கருணாநிதி

கண்ணதாசன்

பேசுவர்

(Ad) தி. மு. க. ஆம்பூர்

திருமணங்கள்

வடக்கநந்தல், 14—9—50 மாவச்சேரியில் கி. அரங்கசாமி—நாகம்மை திருமணம் நடைபெற்றது. தோழர் ஆ. வீரப்பன் தலைமையில் முத்து. நெடுஞ்செழியன், புலவர் வரதராசனர், கே. பி. நெடுமாறன் பேசினர். கி. பெரியசாமியின் புதல்விக்கு 'பூங்கொடி' என்றும் பெயரிடப்பட்டது.

மாயவரம், 12—9—50 செ. ராமசாமி-இராவித்தியாநாயகி வாழ்க்கை ஒப்பந்தம் நகராண்மைக் கழக உறுப்பினர் கோவிந்தசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் சாமிநாதன் இளந்திரையன், சோசப், பாண்டியன், தி. க. தலைவர் சவுரிராசன் ஆகியோர் பேசினர். திருமணம், கலப்புமணம் என்பதோடு காதல் மணம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மாயவரம், 14—9—50 இராதாகிருஷ்ணன்—பச்சையம்மாள திருமணம். தோழர் வை. மாணிக்கம் தலைமையில் தோழர்கள் மாணிக்கம், இராசு, பாண்டியன், எஸ், கருணனந்தம் ஆகியோர் பேசினர்.

பெங்களூர், 15—9—50 அச்சிப்பேட்டை வே. இளஞ்சேரன்—சகுந்தலை மணவிழா எ. எம். தர்மலிங்கம் தலைமையில் நடைபெற்றது. தோழர் பூ. அ. கொடையரசுபேசினர்.

குளித்தலை திராவிட முன்னேற்றக் கழகச் செயலாளர் தோழர் கே ஆர். இராசாவின் செல்வி கன்கு—அய்யப்பெருமாள் திருமணம் குழித்தலை வழக்கறிஞர், திருச்சி மாவட்ட நாட்டாண்மை கழக உறுப்பினர் K. R. வெங்கட்டராமன் B.sc., B. L., தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. திருந்திய திருமணம்பற்றி தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், M. A., ஈ. வெ. கி. சம்பத், சேலம் அ. சித்தையன், புலவர் மா. அய்யாவு ஆகியோர் பேசினர்.

✱

தோழர் மு. கருணாநிதி

தோழர் மு. கருணாநிதி தோழர் கண்ணதாசன்.
12—10—50 முதல் 16—10—50 வரை வட ஆற்காடு மாவட்ட சுற்றுப்பயணம்.

27, 28, 29-10-50 முதல் புதுக்கோட்டை பகுத்தறிவுக் கழக நிதிக்காக நாடகம்.

2—11—50 ஸ்ரீவைகுண்டம் திருமணம். 4—11—50 முதல் 10—11—50 முடிய திருச்சி மாவட்ட சுற்றுப்பயணம். ஆகிய நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதால் இதற்கிடையே வேறு கூட்டங்களில் கலந்துகொள்ள இயலாத நிலையிலிருப்பதாகக் கழகத் தோழர்கட்கு அறிவிக்கிறார்.

வட ஆற்காடு மாவட்டத்தில்

மு. கருணாநிதி

14—10—50 ஆம்பூர்

15—10—50 வேலூர் காலை 9-மணிக்கு ஆண்டுவிழா.

மாலை கோட்டை வெளியில்பொதுக்கூட்டம்.

16—10—50 திருவத்திபுரம்

17—10—50 போளூர்.

✱

10-ம் பக்கத் தொடர்ச்சி

இருக்கிறது. இப்படி டம்பாச்சாரித்தனம் செய்கிறார்கள். இது பொறுப்பற்ற ஊதாரித்தனம்! சுதந்திரக் குழந்தைக்கு கார்டியனாக இருக்க இவர்கள் லாயக்கில்லை இது மத்திய சர்க்கார் யோக்கியதை. இனி சுதந்திரக்குழந்தையை காங்கிரஸ்காரர்கள்வசம் வளரவிடக்கூடாது. அப்படிவிட்டால் நாளுக்குநாள் நிலைமை படுமோசமாகிவிடும் என்பதற்கு சாட்சியம் தேவையில்லை. நேரடியான அனுபவமே போதுமானது. மாகாண சர்க்காரோ அரசாங்க பொருளாதார வண்டியைக் குடைசாய்த்து கஜானாவைகாலியாக்கிவிட்டார்கள். கல்விக்குக் கேட்டால் பணமில்லை, பள்ளிக்கூடம் கட்ட பணம் இல்லை! ஆஸ்பத்திரி கட்ட, வியாதியஸ்தருக்கு மருந்து வாங்க பணமில்லை! நீர்த்தேக்கங்கள் கட்டி அதிக உணவு உற்பத்தி செய்யப் பணமில்லை! குடிதண்ணீர் சப்ளைக்குப் பணம் இல்லை! இப்படியே மக்களுக்கு அவசியத் தேவைகளுக்கு "பணம் இல்லை" என்பதையே பல்லவியாகப்பாடுகிறார்கள். ஏனென்று கேட்டால், கள்ளுக்கடை ஒழித்தார்களாம், அதுவும் வெற்றியில்லாத ஒழிப்புதான். இதை நினைத்தால் மக்களுக்குகல்வி, உணவு, சுகாதாரம் முதலிய வசதிகளுக்கு வேண்டிய பணப்பாலைக் கொடுக்கும் பசுவைக்கொன்றுவிட்டு அதன் தோலை உரித்து செருப்பு தானம் செய்த பழமொழி ஞாபகம் வருகிறது. அந்த செருப்பும் பித்தல் செருப்பு! யாராவது பசுவைக் கொன்று செருப்பு தானம் செய்வானா? நியாயமோ புத்திசாலித்தனமோ இல்லையே. காங்கிரஸ் சர்க்கார் மக்களின் நன்மையைப்பற்றி கவலை கொள்வதில்லை, தங்கள் கட்சிக் கொள்கைக்காக ஆளுகிறார்கள். மக்களுக்காக ஆட்சி நடத்துவதில்லை. இந்த சர்க்கார் மக்கள் சர்க்கார் அல்ல என்பதும், கட்சிக்காகத்தான் சர்க்கார் நடக்கிறது என்பதும் வெட்ட வெளிச்சமாகிவிட்டது. மக்களுக்குவேண்டியமுக்கியப்பிரச்சினைகளுக்குப் பணமில்லை, என்று சொல்லிவிட்டு, பிர்க்கா அபிவிருத்தி என்ற உதவாக்கரை திட்டத்தை நடத்த கோடிக் கணக்கில் பணத்தை பாழாக்குகிறார்கள். இதுவும் கட்சிப் பிரசாரத்திற்குத்தான். இதுமாத்திரமா! மற்றும் ஐம்பது இலட்சம், கோடி என்ற கணக்கில் சர்க்கார் பொதுமக்கள் பணத்தை, காங்கிரஸ் எலக்ஷன் பிரசாரம் செய்ய, மது ஒழிப்பு பிரசாரம், என்ற பெயரால் பணம் ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். முன், ஜஸ்டிஸ் மந்திரிகள்காலத்தில் சொற்ப செலவில் "மிதக்குடிப் பிரசாரம்" செய்தபொழுது வாய் கிழிய சர்க்கார் பணத்தில் கட்சிப் பிரசாரம் செய்வதாக கத்தினவர்களாகியகாங்கிரஸ்காரர்கள் இம்மாதிரி செய்வதால் இவர்களுக்கு சொரணை இருக்கிறதா? அல்லது இவர்கள் எருமைத்தோல் படைத்தவர்களா! அல்லது நீதி உணர்ச்சி என்பது மருந்துக்காவது இவர்களிடத்தில் இருக்கிறதா?—என்பவைகளைக் கண்டு பிடிப்பதுபற்றி பொதுமக்கள் தான் கவனம் செலுத்தவேண்டும். பொதுவாக குரங்கு கையில் பூமாலை கிடைத்த மாதிரி இந்த ஆணவப் பைத்தியங்களிடம் ஆட்சிக் கயிறு கிடைத்துவிட்டது. ஆட்சிக்கயிற்றை அவர்களிடமிருந்து வாங்கி மற்றஅறிவும், அனுபவமும் பொறுப்பும் உள்ளவர்களிடம் கொடுக்கவேண்டியது மக்கள் நலனில் கவலையுள்ளவர்கள் கடனாகும் என்பதைச் சுட்டிக்காட்டவேண்டியது நம்கடமை.

உடுமலை நகரசபைத் தலைவர்
எம். எஸ். கனகராசன்

திராவிடம் தனியாகப் பிரிந்து தனியாட்சி பெறுவதற்குள் நம்மை நாமே ஆள தயாராகிக் கொள்ள திட்டம் வகுத்துக் கொள்ளவேண்டும். நம் நாட்டுப் பொருளாதாரத்திற்கு ஒரு குழுவும், வரலாறு ஆராய்ச்சிக்கு ஒரு குழுவும், நாட்டு அபிவிருத்திக்கு திட்டம் தீட்ட ஒரு குழுவும், அதாவது மின்சார சக்தியைப் பெருக்குவது, நீர்த் தேக்கங்கள் கட்டுவது பற்றி ஆராய்வது, நில நூல் ஆராய்ச்சிக் குழு, நமது நாட்டிலுள்ள நிலக்கரி, இரும்பு, எண்ணை முதலியவைகள் உள்ள கனிகள் கண்டுபிடிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். கடல் வளத்தில் நாம் என்ன பயனடையலாம் என்பதைப் பற்றியும், மற்றும் மொழியாராய்ச்சி முதலியவைகளுக்கும் இப்பொழுதிருந்தே ஏற்பாடுகள் செய்யவேண்டும் என்பதை நமது கட்சிக்கு எடுத்துக் காட்டுகிறேன். முடிவில் ஒன்றை மாத்திரம் சொல்லி இம் மாநாட்டைத் துவக்கிவைக்கிறேன் இவையெல்லாம் கைகூட நமக்கு வேண்டியது பிரசாரம். இது பிரசார உலகம். நினைத்தபடி நினைத்த இடத்தில் கூட்டம் போடுவது என்றில்லாமல், ஒரு திட்டம் வகுத்து கட்சி மூலமாக பிரசாரம் செய்யவேண்டும். மற்றபடி தனிப்பட்ட முறையில் பிரச்சாரம் நடப்பதை கட்டுப்படுத்துவதில்லை. இந்நாட்டின் எதிர்காலம், நம் இயக்க வாலிபர்களிடத்தில் இருப்பதால் எவ்வளவு பெரிய பொறுப்பு அவர்களுக்கிருக்கிறது என்பதை உணர்ந்து கட்டுப்பாடுடன் நடந்து கொள்ள வேண்டும் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்."

✻

மகிழ்ச்சிக்குரிய செய்தி

வரும் 10-10-50-க்குள் "திராவிட நாடு" தினசரி துவக்குவதற்கான அனுமதி கிடைத்துவிடலாமென, எதிர்பார்க்கிறோம்.

'கோட்சே கூட்டம்' வழக்கு

'கோட்சே கூட்டம்' என்ற நூல் வகுப்புத் துவேஷம் ஊட்டுவதாக, நூலாசிரியர் கி. பிச்சமூர்த்திமீது நடந்துவரும் வழக்கு நீள்கிறது. நூலாசிரியர் சார்பில் வழக்கறிஞர் அகிலாண்டம் ஆஜராகிறார். வழக்கு 1948-ல் தொடங்கப் பெற்று இன்னும் முடியவில்லை.

ஆர்க்காடு
பாராட்டுக் கூட்டம்
21-10-50
அண்ணாதுரை
கலந்துகொள்வார்.
சி. வி. எம். அண்ணாமலை தலைமையில்
பலர் பேசுவர்.

சென்னையில்
திருவள்ளுவர் கழக
பொதுக் கூட்டம்
8-10-50 மாலை 6 மணிக்கு
நுங்கம்பாக்கம் அவன்யூ ரோடு சமீபம்
"பிரண்ட்ஸ் யூனியன்" மைதானத்தில்
நடைபெறும்.
சி. என். அண்ணாதுரை,
கே. ஏ. மதியழகன்,
டி. கே. சீனிவாசன்
ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

ஆட்சியாளருக்கு அர்ப்பணம்

திராவிட இயக்கத்தவர் வெற்றிப்பட்டியல் விரிகிறது—அவர்களின் ஆர்வ நடவடிக்கைகளின் எண்ணிக்கை பெருகுகிறது! ஆம், நாடு, நீண்டநாட்களாக எதிர்பார்த்து, எதிர்பார்த்து ஏங்கிக்கிடந்த செயல் முறைகள், உள்ளத்திலே தேங்கி உணர்ச்சிப் பேச்சிலே வழிந்தோடிக்கொண்டிருந்தது போய், காலம் கனிந்துவிட்ட காரணத்தால் சொல்லி வந்ததை செய்கிறார்கள்.

சாதிபேதம் கூடாது என்று கூறிவந்தோம் ஆண்டு பலவாய்—பல துறைகளில் வேர்விட்டிருந்த அந்த வேற்றுமை விஷத்தைப் போக்கப்படாத பாடுபட்டோம். அந்த முயற்சிகளிலே ஒன்று—முன்னர் நம் வெற்றிப் பட்டியலில் இடம் பெற்ற நிகழ்ச்சி. பணம் கொடுத்து, சாப்பிடும் காபிக் கடைகளில் 'இது பிராமணாளுக்கு' 'இது இதராளுக்கு' என்ற கைகாட்டிப் பலகைகள், தங்கள் வாழ்க்கைக்கு வழி காட்டிடும் சலுகைகள் என்று எண்ணிக் கிடந்த வகுப்பு வெறியை வளர்த்திடும் கோணல் புத்தி கும்பல்கள் நாணும்படி அப்பலகைகளை அப்புறப்படுத்தினோம். இப்பொழுது, வெளியில் தொங்கும் விளம்பரப் பலகைகளில் சாதியின் பெயரையோ, வேறு வேண்டாத பிரிவின் பெயரையோ போடக்கூடாது என்று ஆங்காங்கே நம் இயக்கத்தவர் அமைதியான முறையில், அறந்தவறாத நெறியில் கேட்டுள்ளனர். 'விற்பது காபி, இட்டலி இவைதான்—பிராமணாளை அல்லவே, ஆகவே அகற்று அந்தப் பிராமணாளை' என்று எடுத்து விளக்கியுள்ளனர். பலர் நீதி நிறைந்த கோரிக்கை இது என்று தாங்களே அழித்துவிட்டனர். சிலர் தொண்டர்களே அழித்துக் கொள்ளட்டும் என்ற முறையில் நடந்துகொண்டனர். அவர்களின் கண்ணியத்தைப் பாராட்டுகிறோம். நம் இயக்கத்தவரின் அமைதியான அறப்போருக்காக அவர்களை வாழ்த்துகிறோம்.

புகைவண்டி நிலையங்களில், தமிழர்களின் கண்களிலே குருதியை வழியவிடும் ஊர்ப் பெயர்ப் பலகைகளில் தலைமை வகிக்கும் இந்தியை அகற்றியிருக்கின்றனர். உணர்ச்சி உருப்பெறுகிறது—ஊக்கம், உற்சாகம், உத்வேகம்—அத்தனையும் அரிய பெரிய காரியங்களைச் செய்யும் பக்குவத்தைத் தரும் அளவிற்கு தயாராகிவிட்டன. இந்நிகழ்ச்சியை கோவில்பட்டியிலே கூடிய மாநாட்டில் தி. மு. க. செயற்குழுவினர் தீர்மானமாக்கியுள்ளனர்—இதனை ஆட்சியாளர் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும் என்பதற்காக அந்நடவடிக்கைகள் நடந்த ஊர்களைத் தொகுத்து தருகிறோம்.

சாதிப் பெயர் ஒழிந்தது!	இந்திப் பெயர் அழிந்தது!
கடலூர் ஓ. டி.	அறந்தாங்கி
திருவாரூர்	குடந்தை
காஞ்சிபுரம்	சுவாமிமலை
ஆர்க்காடு	பட்டுக்கோட்டை
திருவலஞ்சுழி	கொல்லுமாங்குடி
குடந்தை	திருவண்ணாமலை
திருவண்ணாமலை	அய்யம்பேட்டை
சாக்கோட்டை	பேராவூரணி
அய்யம்பேட்டை	ஸ்ரீரங்கம்
மன்னார்குடி	சீர்காழி
குற்றாலம்	மன்னார்குடி
சீர்காழி	குற்றாலம்
பேராவூரணி	
வேலூர்	
புதுப்பேட்டை (சென்னை)	
கொல்லுமாங்குடி	

போர் நிற்கவில்லை — தொடர்ந்து நடைபெறுகிறது. செய்திகள், தினந் தினம் புதுமைகளைச் சுமந்து வந்த வண்ணமே உள்ளன.

Edited Printed & Published by C N Annadurai M A at Dravida Nadu" Press 95, Tirukkachinambi Street Kancheepuram